Ansell






# நமது நடத்தை நெறிமுறைத் தொகுப்பு

## வழிகாட்டும் கொள்கைகள்

நமது செயல்பாடுகள் அனைத்திற்கும் பாதுகாப்பு என்பது மையப்பகுதியாக இருக்கிறது.
Ansell என்றால் பாதுகாப்பை விட மேலானது என்று பொருள்; நமது தயாரிப்புகளும் சேவைகளும் எல்லா இடங்களிலும் மக்களிடம் நம்பிக்கையை ஊக்குவிக்கிறது மற்றும் வணிகங்களும் தொழிலாளர்களும் சிறப்பாகச் செயல்படுவதை சாத்தியமாக்குகிறது.

# எங்கள் நோக்கமும் குறிக்கோளும்

பணியிட அபாயத்திலிருந்து இரண்டு படிகள் முன்னோக்கி இருப்பதன் மூலம் உலகைப் பாதுகாப்பான எதிர்காலத்தை நோக்கி வழிநடத்துங்கள். எங்கும்.



# எங்கள் மதிப்புகள்




- எங்கள் நோக்கத்திற்கான பெருவிருப்பத்தை நாங்கள் கொண்டுள்ளோம்ம் **(PASSION)**
- நாங்கள் எங்கள் வாடிக்கையாளர்களின் நம்பகமான கூட்டாளராக உள்ளோம் **(RELIABLE)**
- நாங்கள் நேர்மையுடன் செயல்படுகிறோம் **(INTEGRITY)**
- நாங்கள் வாக்குறுதியளித்ததை வழங்குகிறோம் **(DELIVER)**
- நாங்கள் அதிகாரப்பதிர்வை உள்ளடக்கிய குழுக்களின் மூலம் செழித்து வளர்கிறோம் **(EMPOWERED)**

# உங்கள் மேலாண்மையிடமிருந்து கடிதம்

அன்பார்ந்த சக ஊழியர்களே,

1893 ஆம் ஆண்டு நம் நிறுவனம் தொடங்கப்பட்டதிலிருந்து, Ansell உலகம் முழுவதும் மில்லியன் கணக்கான நபர்களுக்கு மேம்பட்ட பாதுகாப்புத் தீர்வுகளை வழங்கிக் கொண்டிருப்பதன் மூலம் பாதுகாப்புத் துறையில் முன்னணி நிறுவனமாகத் திகழ்கிறது.

நமது கடந்தகால வரலாறு நம் அனைவருக்கும் பெருமையளிப்பதாக இருக்கிறது, மற்றும் வாடிக்கையாளர்களுக்கும் பணியாளர்களுக்கும் பாதுகாப்பு, நலவாழ்வு மற்றும் மனநிம்மதி ஆகியவற்றுக்கான புதுமையான மற்றும் பயனுள்ள தீர்வுகளை வழங்குவதற்கான நமது குறிக்கோளை நிறைவேற்றுவதற்கு நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம்.

உலகம் முழுவதும் Ansell பாதுகாப்பை மட்டுமல்லாது நேர்மையையும் குறிக்கிறது.

நமது குறிக்கோளைப் பேணுவதற்கு, Ansell -இன் அடித்தளமாக விளங்கும் நமது முக்கிய மதிப்புகளை நாம் தொடர்ந்து கடைபிடிக்க வேண்டும். இன்றைய வேகமாக வளர்ந்துவரும் உலகில், மதிப்புகளை நம் வாழ்வின் அடிப்படையாக நாம் கடைபிடிக்க வேண்டும். இது ஒரு நிலையான புள்ளியாகும், மேலும் இது நம்முடைய கலாச்சாரத்திற்கு ஒரு முக்கியமான அம்சமாகும் மேலும் இது நீடிக்கின்ற ஒரு பகுதியாகும்.

இந்த நடத்தை நெறிமுறைத் தொகுப்பு, மிகவும் சிக்கலான பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான வழிகாட்டும் கொள்கைகளை உங்களுக்கு வழங்குகிறது. Ansell–இல் பணிபுரியும் ஊழியர்களின் பணிச் செயல்பாடு அல்லது பணிமூப்பு எவ்வாறாக இருந்தாலும், நமது குறியீடு உலகளவில் அனைவருக்கும் பொருந்தக்கூடியது என்றாலும் கூட அது ஒவ்வொரு சாத்தியமுள்ள சூழ்நிலைக்கும் தீர்வு காண்பதில்லை அல்லது மனதில் நினைக்கக்கூடிய ஒவ்வொரு பிரச்சனையையும் எதிர்பார்ப்பதில்லை. அல்லது மனதில் நினைக்கக்கூடிய ஒவ்வொரு பிரச்சனையையும் எதிர்பார்ப்பதில்லை. அதற்கிணங்க, நாம் எப்போதும் நமது நெறிமுறைத் தொகுப்பின் "உட்பொருளுக்கு" உட்பட்டும், நமது மதிப்புகளுக்கு இணங்கவும் செயல்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

உங்களுக்கு கேள்விகள் இருக்கும்போது அல்லது கவலைகளைத் தெரிவிக்க வேண்டியிருக்கும்போது அல்லது சாத்தியமுள்ள குற்றச் செயல்களை நீங்கள் பார்க்கும்போது அல்லது செயல்பாட்டின் ஒரு குறிப்பிட்ட நிகழ்வு நமது நெறிமுறைத் தொகுப்பை மீறுகிறதா என்பதைப் பற்றி உங்களுக்கு சந்தேகம் எழும்போது உதவி கோருமாறு நீங்கள் எப்போதும் ஊக்குவிக்கப்படுகிறீர்கள் (மற்றும் அது பெரும்பாலும் தேவைப்படுகிறது).

Ansell -இல், நாங்கள் மேலான நடத்தையைக் கோருகிறோம் மற்றும் செயல்திறனை எதிர்பார்க்கிறோம், ஆனால் ஏதாவது ஒரு வழியில் அல்ல. எந்த வணிக ஆதாயமும் அல்லது வெற்றியும், அளவைக் கருத்தில் கொள்ளாமல், அது நம் மதிப்புகளைத் தியாகம் செய்து கிடைப்பதாக இருந்தால் அது எப்போதும் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக அல்லது பயனுள்ளதாக இருக்காது.

தயவுசெய்து Ansell நடத்தை நெறிமுறைத் தொகுப்பை கவனமாகவும் முழுமையாகவும் படியுங்கள். இந்த நெறிமுறைத் தொகுப்பு Ansell நிறுவனம் அமைந்துள்ள அனைத்து முக்கிய இடங்களிலும் கிடைக்கிறது, மற்றும் நீங்கள் அதைப் புரிந்துகொண்டிருப்பதையும், நீங்கள் பின்பற்ற வேண்டும் என நாங்கள் எதிர்பார்க்கின்ற நன்னெறிப் பொறுப்புகள் மற்றும் தரங்களையும் உறுதிசெய்ய Ansell குறிப்பிட்ட கால இடைவெளிகளில் பயிற்சியளிக்கும்.

நீங்கள் நெறிமுறைத் தொகுப்பைப் படித்திருக்கிறீர்கள், அதைப் புரிந்துகொண்டீர்கள் மற்றும் அதைக் கடைபிடிக்க ஒப்புக்கொண்டிருக்கிறீர்கள் என்பதை முறைப்படி ஒப்புக்கொள்ள வேண்டுமென உங்களிடம் வழக்கமாக கேட்கப்படும்.

நமது முதன்மைக் கொள்கைகளுக்கு உண்மையாக இருப்பது உங்கள் தொலைநோக்குப் பார்வையை நனவாக்க உதவும், மேலும் Ansell மற்றும் நாம் செயல்படும் சமுதாயங்கள் இரண்டையுமே நாம் அங்கத்தினர்களாக இருப்பதற்கு ஊக்கமளிக்கும் இடங்களாக ஆக்குகின்றன.

தங்கள் உண்மையுள்ள,

**Ansell நிர்வாகத் தலைமைக் குழு**

**Neil Salmon**
Managing Director and
Chief Executive Officer

**Brian Montgomery**
Chief Financial Officer

**Charlotte Doll**
Chief Human Resources
Officer

**Philippe Rommel**
Chief Legal Officer

**John Marsden**
Chief Operations
& Supply Chain Officer

**Deanna Johnston**
Chief Information Officer

**Sean P. Sweeney**
Chief Commercial Officer,
Americas

**Augusto M. Accorsi**
Chief Commercial Officer,
EMEA/APAC

**Rob Hughes**
Chief Product &
Marketing Officer

# பொருளடக்க அட்டவணை


**01 நமது வழிகாட்டும் கொள்கைகள் பற்றிய அறிமுகம்**

01 நமது நெறிமுறைத் தொகுப்பின் நோக்கம்
01 நமது நெறிமுறைத் தொகுப்பின் குறியிலக்கு
02 உள்ளூர் சட்டங்களுடனான இணக்கம்
02 பணியாளர்கள், மேலாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களின் கூடுதல் பொறுப்புகள்

**03 ஆலோசனை கோருதல் மற்றும் கவலைகளைத் தெரிவித்தல்**

03 Ansell-இல் பழிவாங்கும் நடவடிக்கை இல்லை
04 புகார்கள் பற்றிய விசாரணை
04 நெறிமுறை மீறல்களால் ஏற்படும் விளைவுகள்

**05 ஒருவருக்கொருவர் உள்ள நமது பொறுப்புகள்**

05 நமது பணியிடத்தில் மரியாதை
06 நமது பணியிடத்தில் பாதுகாப்பு மற்றும் உடல்நலம்
06 நியாயமான வேலைவாய்ப்பு நடைமுறைகள்
06 பணியாளர்களின் அந்தரங்கம்

**07 நமது வாடிக்கையாளர்கள் மற்றும் வணிகக் கூட்டாளிகளுக்கான நமது பொறுப்புகள்**

07 தயாரிப்புப் பாதுகாப்பு
08 நியாயமான வணிகம்
09 போட்டி சட்டங்கள்
10 அரசாங்க ஒப்பந்தங்கள்

**11 நமது பங்குதாரர்களுக்கான நமது பொறுப்புகள்**

11 ஆதாய முரண்பாடுகள்
13 நிறுவனச் சொத்து
13 அறிவுசார் சொத்து மற்றும் இரகசியத் தகவல்
14 தரவு தனியுரிமை
14 நிறுவனத்தின் கணினிகளை முறையாகப் பயன்படுத்துதல்
15 கணக்கேடுகள் மற்றும் பதிவேடுகள்
17 உள் வர்த்தகம்
18 ஊடகங்கள் மற்றும் பகுப்பாய்வாளர்களிடமிருந்து விசாரணைகள்

**19 ஒரு சிறந்த பெருநிறுவனக் குடிமகனாக நமது பொறுப்புகள்**

19 சமூகப் பொறுப்புணர்வு
19 சுற்றுச்சூழல் பாதுகாப்பு
19 அரசியல் மற்றும் அறக்கொடை பங்களிப்புகள்
20 இலஞ்சம், உபசாரப் பணம் மற்றும் ஊழல்
21 வர்த்தக கட்டுப்பாடுகள்

**23 நமது நெறிமுறைத் தொகுப்பின் உரிமைத் துறப்புகள்**





*குறிப்பு: நமது நெறிமுறைத் தொகுப்பில், "Ansell" அல்லது "நிறுவனம்" என்பது Ansell Limited மற்றும் அதன் அனைத்து துணை நிறுவனங்களையும் இணை நிறுவனங்களையும் குறிக்கிறது.*

# நமது வழிகாட்டும் கொள்கைகள் பற்றிய அறிமுகம்

## நமது நெறிமுறைத் தொகுப்பின் நோக்கம்

Ansell-யின் உலகளாவிய நடத்தை நெறிமுறைத் தொகுப்புக்கு உங்களை வரவேற்கிறோம்: நமது வழிகாட்டும் கொள்கைகள், நமது "நெறிமுறைத் தொகுப்பு" எனவும் அழைக்கப்படுகின்றன. நமது நெறிமுறைத் தொகுப்பு Ansell-யின் செயல்பாடுகள் அனைத்திற்கும் செயற்களமாகச் செயல்படுகிறது. சக பணியாளர்கள், வாடிக்கையாளர்கள், சப்ளையர்கள், விநியோகிப்பாளர்கள், பிற வணிகக் கூட்டாளிகள், ஆலோசகர்கள், பங்குதாரர்கள், அரசாங்க முகமைகள், உடல்நலப் பராமரிப்பு வல்லுநர்கள், மருத்துவமனைகள், தயாரிப்புப் பயனர்கள் மற்றும் உள்ளூர் சமூகங்கள் ஆகியோர் உட்பட - நமது பல்வேறு பங்குதாரர்களைக் கையாளும்போது மிகுந்த நேர்மையுடன் எப்படிச் செயல்படுவது என்பதை அது நமக்குக் காண்பிக்கிறது. இந்தப் பங்குதாரர்களுடனான தொடர்பாடலின் போது நமது நெறிமுறைத் தொகுப்பை பின்பற்றுவதன் மூலம், நமது நிறுவனத்தின் வெற்றியை உறுதிசெய்யவும், அதன் வணிக ஆபத்துகளைக் குறைக்கவும் நாம் உதவுகிறோம்.

நமது நெறிமுறைத் தொகுப்பு Ansell-இல் உள்ள நன்னெறிக் கொள்கைகளுக்கும், வணிக நடத்தைக்கும் ஒரு வழிகாட்டியாகவும் விளங்குகிறது. அது நம்மிடமிருந்து எதிர்பார்க்கப்படும் நடத்தைகளைத் தெளிவுபடுத்துகிறது, நன்னெறி சார்ந்த முடிவுகள் எடுக்க நமக்கு உதவுகிறது, மதிப்புகளை பிரதிபலிக்கிறது, மற்றும் சாத்தியமுள்ள தவறான நடத்தைகளை எவ்வாறு அடையாளம் காண்பது என்பதை நமக்குக் காட்டுகிறது. அதோடு, நமக்கு ஏதாவது கேள்விகள் எழுந்தால் அல்லது ஒரு அறிக்கை தயார் செய்ய விரும்பினால் நாம் எங்கு செல்ல வேண்டும் என்பதை அது நமக்குச் சொல்கிறது.

## நமது நெறிமுறைத் தொகுப்பின் நோக்கம்

நமது நெறிமுறைத் தொகுப்பு மற்றும் மதிப்புகள் -பணியாளர்கள், அதிகாரிகள் மற்றும் இயக்குநர்கள் உட்பட நாம் அனைவருக்கும்- நாம் எங்கிருக்கிறோம் என்பதைப் பொருட்படுத்தாமல் நமது அனைத்து பணி நடவடிக்கைகளுக்கும் பொருந்துகிறது. அதோடு, Ansell-இன் சார்பாக அல்லது Ansell-இன் வளாகங்களுக்குள் பணிபுரியும்போது நமது ஆலோசகர்கள், சப்ளையர்கள், விநியோகிப்பாளர்கள் மற்றும் பிற வணிகக் கூட்டாளிகள் இந்தக் கொள்கைகள் மற்றும் நமது மதிப்புகளைக்கடைபிடிக்க வேண்டும் என நாம் எதிர்பார்க்கிறோம்.

இந்த விதியானது, எங்கள் இன்ட்ராநெட் தளத்தில் காணக் கிடைக்கும் Our Ansell நிறுவனக் கொள்கைகளுடன் ஒத்துப்போவதையும் அதை மேற்கோளாகக் கொள்வதையும் நோக்கமாகக் கொண்டது. இந்தக் கொள்கைகள், எங்கள் விதியில் வழங்கப்பட்டுள்ளதை விட கூடுதலான விவரங்களை வழங்கக்கூடும்.



## உள்ளூர் சட்டங்களுக்கு இணங்கி நடத்தல்

Ansell உலகளவில் பரந்து வியாபித்துள்ளதன் காரணமாக, அனைத்து பொருந்தக்கூடிய உள்ளூர் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறை நிபந்தனைகளை நாம் அறிந்திருப்பதும் அவற்றைப் பின்பற்றுவதும் முக்கியமாகும். நமது நெறிமுறைத் தொகுப்பு மற்றும் நிறுவனத்தின் கொள்கைகளில் விளக்கிக் கூறப்பட்டுள்ள தரநிலைகளை நாம் கட்டாயம் நிலைநிறுத்த வேண்டும். சில சூழ்நிலைகளில், நாம் வணிகம் செய்துகொண்டிருக்கும் இடங்களில் சட்டரீதியாகத் தேவைப்படுவதை விட உயர்வான தரநிலைகளுக்கிணங்க நாம் இதற்காகச் செயல்பட வேண்டியிருக்கலாம்.

சட்டங்களும் ஒழுங்குவிதிகளும் சிக்கலானவை மற்றும் மாற்றத்துக்கு உட்பட்டவை. மேலும், பெரும்பாலும் அவை இடத்தைப் பொறுத்து பெரிதும் மாறுபடுகின்றன. ஒரு வணிக முடிவு அல்லது நடவடிக்கை சட்டப்பூர்வமானதா அல்லது பொருத்தமானதா என்பதைப் பற்றி உங்களுக்கு ஏதாவது சந்தேகங்கள் இருந்தால், "ஆலோசனை கோருதல் மற்றும் கவலையைத் தெரிவித்தல்" என்ற தலைப்பில் விளக்கிக் கூறப்பட்டுள்ள படிகளைப் பின்பற்றுவதன் மூலம் நீங்கள் வழிகாட்டுதலை நாட வேண்டும்.



## பணியாளர்கள், மேலாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களின் கூடுதல் பொறுப்புகள்

Ansell பணியாளர்கள், மேலாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்கள் நாம் அனைவரும் பகிர்ந்துகொண்ட விஷயங்களுக்கு அப்பாற்பட்ட கூடுதல் பொறுப்புகளைக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் மற்றவர்களை நிர்வகித்தால், நீங்கள் மற்றவர்களுக்கு உதாரணமாக விளங்கவேண்டும் எனவும், நன்னெறி ரீதியாக முன்மாதிரியாக விளங்கவேண்டும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. அதாவது, உங்களுக்கு அறிக்கையளிப்பவர்களுக்கு நமது நெறிமுறைத் தொகுப்பை திறம்படத் தெரியப்படுத்த முடியும் வகையில் நீங்கள் இதைப் பற்றி நன்கு அறிந்திருக்க வேண்டும். அதோடு, பணியாளர்கள் தங்கள் கேள்விகளுடன் அல்லது கவலைகளுடன் உங்களிடம் தெரிவிக்க தயக்கமின்றி வருகின்ற நேர்மறையான வேலைச் சூழலை உருவாக்க வேண்டிய பொறுப்பு உங்களுக்கு உள்ளது.

ஒழுக்கமற்ற நடத்தை அல்லது தவறான நடத்தை உங்கள் பொறுப்பு அல்லது நிபுணத்துவப் பகுதிகளுக்கு வெளியே நிகழ்ந்தால் கூட நீங்கள் அதை ஒருபோதும் அலட்சியம் செய்யக் கூடாது. உங்களிடம் யாராவது ஒரு பிரச்சனையைக் கொண்டுவந்தால், அந்தப் பிரச்சனையை சரியான முறையில் தீர்க்க வேண்டிய கடமை உங்களுக்கு இருக்கிறது, அதற்காக நீங்கள் மனித வளத் துறை, இணக்க அதிகாரி, சட்டத் துறையின் உறுப்பினர்கள் அல்லது நிறுவனத்துக்குள் உள்ள பிற பொருத்தமான வளங்கள் ஆகியவற்றை நீங்கள் தொடர்புகொள்ள வேண்டியிருக்கலாம் (பார்க்கவும்: ஆலோசனை கோருதல் மற்றும் கவலைகளைத் தெரிவித்தல்). உண்மையான அல்லது சந்தேகிக்கப்படும் தவறான நடத்தை பற்றி நன்னம்பிக்கையின் அடிப்படையில் புகார் செய்கின்ற ஒருவருக்கு எதிராக நீங்கள் ஒருபோதும் பழிவாங்கும் நடவடிக்கையில் ஈடுபடக் கூடாது (அல்லது பழிவாங்கும் நடவடிக்கையில் ஈடுபட வேறொருவரை அனுமதிக்கக் கூடாது). அவ்வாறு செய்கின்ற அல்லது அத்தகைய பழிவாங்கும் நடவடிக்கையை அனுமதிக்கின்ற மேலாளர்கள் அல்லது மேற்பார்வையாளர்கள் உள்ளூர் சட்டத்துக்கு இணங்க ஒழுங்கு நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

ஒரு மேலாளராக, நமது நெறிமுறைத் தொகுப்பு மற்றும் பொருந்தக்கூடிய Ansell கொள்கைகள் தொடர்பாக தேவைப்படும் பயிற்சியை உங்களுக்கு அறிக்கையளிக்கும் நபர்கள் முடித்திருப்பதை நீங்கள் உறுதிசெய்ய வேண்டும்.



# ஆலோசனை கோருதல் மற்றும் கவலையைத் தெரிவித்தல்

சில நேரங்களில், சரியான நடவடிக்கை பற்றி உங்களுக்கு நிச்சயமாகத் தெரியாத ஒரு நன்னெறி சார்ந்த தர்மசங்கடத்தில் நீங்கள் சிக்கியிருப்பதைக் காணலாம். ஒரு நடவடிக்கை நமது நெறிமுறைத் தொகுப்பு அல்லது Ansell கொள்கைகளுக்கு இணக்கமானதாக இருக்கிறதா என்பதைப் பற்றிய கேள்விகளோ அல்லது சந்தேகங்களோ உங்களுக்கு இருந்தால், நீங்கள் ஆலோசனை பெற வேண்டும்.

மேலும், Ansell மற்றும் உங்கள் சக ஊழியர்களுக்கு நீங்கள் செய்ய வேண்டிய கடமை ஒன்று என்னவெனில் நமது நெறிமுறைத் தொகுப்பு, Ansell கொள்கை, அல்லது பொருந்தக்கூடிய சட்டங்கள் அல்லது ஒழுங்குவிதிகள் ஏதாவது மீறப்பட்டிருப்பதாக நீங்கள் அறியவந்தாலோ அல்லது சந்தேகித்தாலோ அதைப் பற்றிப் புகாரளிக்க வேண்டும். அவ்வாறான ஒரு புகாரளிப்பதன் மூலம், Ansell மற்றும் அதற்காகப் பணிபுரியும் அனைவரின் நற்பெயரையும் நேர்மையையும் நீங்கள் பாதுகாக்கிறீர்கள்.

நீங்கள் ஒரு ஆலோசனை பெற வேண்டியிருந்தால் அல்லது ஒரு கவலையைப் பற்றி தெரிவிக்க வேண்டியிருந்தால், உதவிக்காக முதலில் உங்கள் மேலாளரைத் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். அவ்வாறு செய்வது உங்களுக்கு சங்கடமாக இருந்தால், இவரைத் தொடர்புகொள்வதற்கு நீங்கள் ஊக்குவிக்கப்படுகிறீர்கள்:

- மனித வளத் துறை
- இணக்க அதிகாரி (complianceofficer@ansell.com என்ற முகவரியில் மின்னஞ்சல் மூலம்)
- சட்டத் துறை, அல்லது
- இணக்க ஹாட்லைன்
    - தொலைபேசி: நாடு அந்தந்த நாட்டுக்குரிய தொலைபேசி எண்களை உங்கள் இருப்பிடத்தில் உள்ள Ansell இணக்க ஹாட்லைன் சுவரொட்டியில் அல்லது http://www.ansell.com/hotline என்ற இணைப்பில் ஆன்லைனில் காணலாம்.
    - **ஆன்லைன்: http://ansell.ethicspoint.com/**
    - எங்களது இணக்க ஹாட்லைன் ஒரு சுயாதீன சேவையால் இயக்கப்படுகிறது, அது உங்கள் அழைப்பு பற்றிய அறிக்கையை Ansell-இல் பணிபுரியும் இணக்க அதிகாரிக்கு அனுப்பும். **புகாரளிக்கும் அமைப்பானது புகாரின் பொருள் ஒருபோதும் அதைப் பெறுகின்ற நபராக இல்லாதிருக்கும் விதமாக வடிவமைக்கப்பட்டுள்ளது**. ஹாட்லைன் சேவை ஒரு நாளின் 24 மணிநேரமும், வாரத்தின் ஏழு நாட்களிலும் கிடைக்கிறது. உள்ளூர் சட்டம் அனுமதிக்கும் பட்சத்தில் எமது இணக்க ஹாட்லைனில் நீங்கள் அநாமதேயமாக புகார்களைத் தெரிவித்தாலும் கூட, உங்கள் அடையாளத்தைத் தெரிவிக்குமாறு நாங்கள் உங்களைக் கேட்டுக்கொள்கிறோம். அவ்வாறு தெரிவிப்பது உங்கள் கவலையைப் பற்றி முழுமையாக விசாரிக்க எங்களுக்கு உதவும். கூடுதல் தகவல்களுக்கு உங்கள் இருப்பிடத்தில் உள்ள இணக்க ஹாட்லைன் சுவரொட்டியைப் பார்க்கவும்.

## Ansell-இல் பழிவாங்கும் நடவடிக்கை இல்லை

நன்னம்பிக்கையின் அடிப்படையில் ஒரு கவலையைத் தெரிவித்ததற்காக அல்லது ஒரு புகார் பற்றிய விசாரணையில் பங்கேற்றதற்காக நீங்கள் பழிவாங்கப்படாமல் Ansell உங்களைப் பாதுகாக்கும். "நன்னம்பிக்கையின்" அடிப்படையில் புகாரளிப்பது என்றால், புகார் உண்மையானது எனத் தெரியவருமா என்பதைப் பற்றிக் கருத்தில் கொள்ளாமல் உங்களுக்குத் தெரிந்த எல்லாத் தகவல்களையும் நீங்கள் வழங்கியிருக்கிறீர்கள் மற்றும் நேர்மையாக புகாரளித்திருக்கிறீர்கள் என்பதாகும்.

சக ஊழியருக்கு எதிராக பழிவாங்கும் நடவடிக்கையில் ஈடுபட முயற்சிக்கும் எந்த ஒரு பணியாளரும் (அல்லது அவ்வாறான பழிவாங்கும் நடவடிக்கை பற்றி அறிந்த பின்னரும் உரிய முறையில் அதைத் தெரிவிக்காதவர்) உள்ளூர் சட்டத்திற்கு இணங்க பணிநீக்கம் உள்ளிட்டு வரையிலான ஒழுங்கு நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார். பழிவாங்கும் நடவடிக்கையை அனுபவித்திருப்பதாகவோ அல்லது பார்த்திருப்பதாகவோ சந்தேகித்தால், உங்கள் கவலையை முறையாகத் தெரிவிக்க வேண்டும்.



## புகார்கள் பற்றிய விசாரணைகள்

அனைத்துப் புகார்களும் இணக்க அதிகாரியின் மேற்பார்வையின் கீழ் உடனடியாகவும் முழுமையாகவும் விசாரணை செய்யப்படும். உள்ளூர் சட்டத்துக்கு இணங்க பிரச்சனைக்கு மனநிறைவளிக்கும் தீர்வுக்கு அனுமதியளிக்கும் அதே நேரம் நீங்கள் வழங்கும் எந்தத் தகவலையும் Ansell இரகசியமாக வைத்துக்கொள்ளும். உள்ளூர் சட்டத்தால் கோரப்படும்போது, தவறு செய்ததாக குற்றம் சாட்டப்பட்ட எவரும் தங்களைப் பற்றி புகாரளிக்கப்பட்ட தகவல்களை அணுகுவதற்கான உரிமையையும், அதைச் சரிசெய்வதற்கான உரிமையையும் பெற்றிருப்பார்கள்.

கோரப்படும்போது, புகாரளிக்கப்பட்ட விதிமீறல் பற்றிய விசாணைக்கு நீங்கள் ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## நெறிமுறை மீறல்களால் ஏற்படும் விளைவுகள்

நமது நெறிமுறைத் தொகுப்பு, கொள்கைகள், ஒழுங்குவிதிகள் மற்றும் சட்டம் ஆகியவற்றின் மீறல்கள் மிகவும் தீவிரமானதாக எடுத்துக்கொள்ளப்படுகின்றன, ஏனெனில் அவை சம்பந்தப்பட்ட நபருக்கு (நபர்களுக்கு) மட்டுமல்லாது, Ansell நிறுவனத்துக்கும் மோசமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடியதாக இருக்கலாம். தனிப்பட்டவரைப் பொறுத்து, உள்ளூர் சட்டத்துக்கு இணங்க பணிநீக்கம் உள்ளிட்டது வரையிலான ஒழுங்கு நடவடிக்கைக்கு இது வழிவகுக்கலாம். ஒரு தனிப்பட்ட நபரால் மேற்கொள்ளப்படும் விதிமீறல்கள் Ansell மற்றும்/அல்லது அதன் அதிகாரிகளுக்கு உரிமையியல் மற்றும்/அல்லது குற்றவியல் பொறுப்பைக் கூட ஏற்படுத்தலாம்.



# ஒருவருக்கொருவர் உள்ள நமது பொறுப்புகள்



## நமது பணியிடத்தில் மரியாதை

எங்கள் வணிக வெற்றியின் பெரும்பகுதியும் அனைவருக்கும் உட்புகும் உணர்வை ஏற்படுத்துவதிலும், உட்புகுமையையும் மதிப்பளிக்கும் பண்பாட்டிலும் உள்ளது. உட்புகுமை, திறந்த மனப்பான்மை மற்றும் சகிப்புத்தன்மையை ஊக்குவிக்கும் பணியாளர்களை வைத்திருப்பது ஒவ்வொருவரின் திறமைகள் மற்றும் வலிமைகள் வரவேற்கப்படும், பயன்படுத்தப்படும் மற்றும் மதிக்கப்படும் ஒரு பணிமூல சூழலை உருவாக்கும் என நாங்கள் நம்புகிறோம்.

எங்கள் பணிமூல சூழல் சக்திவாய்ந்ததாக இருக்க, சட்டத்திற்குப் புறம்பான வேறுபாட்டு செயல்கள் இல்லாத வகையில் அதை பாதுகாக்க வேண்டிய தேவை உள்ளது. அதாவது, நாங்கள் எல்லா வேலைவாய்ப்பு முடிவுகளையும் திறமை அடிப்படையில், சம்பந்தப்பட்ட சட்டங்களை முழுமையாகக் கடைபிடித்து எடுக்கிறோம். இனம், பாலினம், சமூக நிலை, வயது, மதம், பாலின விருப்பம் அல்லது வேலை செயல்திறனைச் சாராத பிற இயல்புகள் எங்களின் முடிவுகளில் பாதிப்பை ஏற்படுத்தக் கூடாது என்பதை உறுதி செய்கிறோம்.

நமது பணியிடம் துன்புறுத்தல்கள் அல்லது ஏளனம் செய்தல் ஏதும் இல்லாமல் இருப்பதை உறுதி செய்வதற்காகவும் நாம் பாடுபட வேண்டும். “துன்புறுத்தல்” என்பது பொதுவாக ஒரு நபருக்கு அச்சுறுத்துகின்ற, விரோதமான அல்லது வெறுப்பூட்டுகின்ற பணிச் சூழலை உருவாக்குகின்ற நோக்கம் அல்லது விளைவைக் கொண்டிருக்கின்ற, ஒரு நபர் மற்றொரு நபரிடம் காட்டுகின்ற விரும்பத்தகாத நடத்தையை உள்ளடக்குகிறது. பாலியல் துன்புறுத்தல் என்பது விரும்பத்தகாத பாலியல் நடத்தைகள், தேவையின்றித் தொடுதல், மறைமுகமான அல்லது ஆபாசமான குறிப்புகள், பாலியல் ஆதாயங்களுக்கான கோரிக்கைகள் மற்றும் அநாகரிகமான உள்ளடக்கத்தைக் காட்டுதல் ஆகியவற்றை உள்ளடக்குகிறது. எந்த விதமானதுன்புறுத்தல்அல்லது ஏளனம் செய்தலையும் Ansell பொறுத்துக்கொள்ளாது.

எந்தவொரு துன்புறுத்தல், ஏளனம் செய்தல் அல்லது பாகுபாடு தொடர்பான பிரச்சனைகளையும்முறையாக நீங்கள் புகாரளிக்க வேண்டும். அத்தகைய புகார்கள் அனைத்தையும் Ansell விசாரணை செய்து பொருத்தமான சரிப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும். நன்னம்பிக்கையுடன் புகார் செய்வதற்காக நீங்கள் பழிவாங்கும் நடவடிக்கையும் எதையும் எதிர்கொள்ள மாட்டீர்கள்.

# நமது பணியிடத்தில் பாதுகாப்பு மற்றும் உடல்நலம்

### பணியிடப் பாதுகாப்பு மற்றும் உடல்நலம்

பணியிடப் பாதுகாப்பில் உலகில் முன்னணி பெற்று விளங்கும் நிறுவனமாக, நமது பணியிடங்கள் பாதுகாப்பாகவும் ஆரோக்கியமாகவும் இருப்பதை உறுதிசெய்ய நாம் ஒன்றிணைந்து வேலை செய்வது மிகவும் முக்கியமாகும். எங்களுடைய 5-அம்ச பாதுகாப்புச் சாசனத்தாலும், அனைத்து பணியாளர்கள், ஒப்பந்ததாரர்கள் மற்றும் பார்வையாளர்களை உள்ளடக்கிய அதிக அபாயமுள்ள பணிகளுக்கும் (HRT), முக்கிய செயல்பாட்டு நடைமுறைகளுக்குமான கட்டாய உலகளாவிய தரநிலைகளை உள்ளடக்கிய ஓர் EHS கட்டமைப்பாலும் Ansell வழிநடத்தப்படுகிறது. இந்த கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் நாம் பரஸ்பரம் பாதுகாத்துக் கொள்ளவும், நமது வாடிக்கையாளர்களுக்கு பாதுகாப்பான தரமான தீர்வுகளை வழங்கவும் நமக்கு உதவுகிறது. நமது வேலையை மிகப் பாதுகாப்பான சாத்தியமுள்ள முறையில் நடத்துவதற்கு நமக்குள்ள பொறுப்பின் ஒரு பகுதியாக, நமது வேலைகளுக்குப் பொருத்தமான அனைத்து உடல்நல மற்றும் பாதுகாப்புச் சட்டங்கள் மற்றும் விதிமுறைகளுக்கு இணங்கி நடக்கிறோம். மேலும், Ansell-இல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள அனைத்துப் பாதுகாப்பு அறிவுறுத்தல்கள் மற்றும் நடைமுறைகளை நாம் பின்பற்றுகிறோம் மற்றும் விதிமீறல்கள் பற்றி உட்புறமாகவும் (உள்ளூர் EHS மேலாண்மைக்கு), தேவைப்படும்போது தகுதிவாய்ந்த உள்ளூர் அதிகாரிகளிடமும் புகார் செய்கிறோம். ஏதேனும் பாதுகாப்பற்ற சூழ்நிலைகள் அல்லது நிலைமைகள் பற்றி உங்களுக்குத் தெரியவந்தால், உடனடியாக உங்கள் மேலாளரை எச்சரிக்கை செய்யுங்கள். ஒரு சுற்றுச்சூழல், உடல்நல அல்லது பாதுகாப்புச் சம்பவம் முறையாகப் புகார் செய்யப்படவில்லை என நீங்கள் கருதினால், தயவுசெய்து இணக்க அதிகாரியைத் தொடர்புகொள்ளவும்.

### போதைமருந்துகள் மற்றும் மது

நமது பணியிடத்தின் பாதுகாப்பை உறுதிசெய்ய, நாம் அனைவரும் வணிகம் செய்துகொண்டிருக்கும்போது மதுப்பழக்கம், போதைப்பொருள் பழக்கம் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட மருந்துகளை தவறாகப் பயன்படுத்துவது போன்றவைகளைக் கைவிட வேண்டும். உள்ளூர் சட்ட மற்றும் கொள்கை நிபந்தனைகளுக்கு உட்பட்டு, Ansell வளாகத்திற்குள் அல்லது Ansell வணிகம் மேற்கொள்ளும்போது சட்டவிரோத போதைப்பொருட்கள் அல்லது பிற தடை செய்யப்பட்ட பொருட்களை வைத்திருப்பது, பயன்படுத்துவது, விற்பனை செய்வது, வழங்குவது அல்லது விநியோகிப்பது தடை செய்யப்பட்டுள்ளது. பொருந்தக்கூடிய நிறுவனக் கொள்கைகளுக்கு இணங்க, அனைத்து வணிக விருந்துகள் அல்லது அங்கீகரிக்கப்பட்ட Ansell நிகழ்ச்சிகளில் நீங்கள் மிதமாக மது அருந்தலாம். இந்தக் கொள்கை மீறல்கள் பாதுகாப்பு அபாயங்களை ஏற்படுத்தலாம் மற்றும் அது மிகக் கடுமையான தவறான நடத்தையாக கருதப்படும்.

### வன்முறை மற்றும் ஆயுதங்கள்

பணியிடப் பாதுகாப்புக்கான நமது பொறுப்பு என்பது வன்முறைச் செயல்பாடுகள் அல்லது அச்சுறுத்தல்களுக்கு Ansell-இல் இடமில்லை என்பதையும் குறிக்கிறது. Ansell சொத்துக்குள் நாம் ஆயுதங்களை வைத்திருக்கக் கூடாது. அசாதாரணமான சூழ்நிலைகளில், சட்டரீதியான அனுமதியுடனும் பணியிட மேலாளர் மற்றும் Ansell-இன் தலைமை நிர்வாக அதிகாரியின் அனுமதியுடனும், புகழ்பெற்ற மற்றும் உரிமம் பெற்ற பாதுகாப்பு நிறுவனங்களால் பணியமர்த்தப்பட்ட ஆயுதம் தாங்கிய காவலர்கள் பணியாளர்கள் மற்றும் பொதுமக்களின் பாதுகாப்பு சார்ந்த நலனுக்காக பணியிடத்துக்குள் அனுமதிக்கப்படலாம். வன்முறை அல்லது சாத்தியமுள்ள வன்முறைச் சூழலை நீங்கள் அனுபவித்திருந்தால், பார்த்திருந்தால் அல்லது அறிந்திருந்தால், அந்தச் சூழ்நிலை பற்றி நீங்கள் உடனடியாக உங்கள் மேலாளர், மனித வளத்துறை அல்லது உள்ளூர் அதிகாரிகளிடம் புகாரளிக்க வேண்டும்.

# நியாயமான வேலைவாய்ப்பு நடைமுறைகள்

தனது பணியாளர்களை கண்ணியத்துடனும் மரியாதையுடனும் நடத்துவதற்கு Ansell கடமைப்பட்டிருக்கிறது. பகுதியளவு இது எதைக் குறிக்கிறது என்றால், நாம் ஒருவரையொருவர் நியாயமாக நடத்த வேண்டும் மற்றும் வேலைவாய்ப்பு மற்றும் பணியிட நிலைமைகள் தொடர்பான பொருந்தக்கூடிய சட்டங்கள் அனைத்திற்கும் இணங்கி நடக்க வேண்டும். எந்தச் சூழ்நிலையிலும், எந்த வகையான குழந்தைத் தொழிலாளர், கட்டாயத் தொழிலாளர் அல்லது விருப்பமில்லாத் தொழிலாளர் முறையை Ansell ஒருபோதும் பொறுத்துக்கொள்ளாது.

நமக்கு மூலப்பொருள் வழங்குபவர்கள் மற்றும் அயற்பணி தயாரிப்பாளர்களும் இதே வேலைவாய்ப்பு நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என நாங்கள் எதிர்பார்க்கிறோம். "ஒரு சிறந்த பெருநிறுவனக் குடிமகனாக நமது பொறுப்புகள், சமூகப் பொறுப்புடைமை" எனப் பெயரிடப்பட்ட நமது நெறிமுறைத் தொகுப்பின் பிரிவையும் பார்க்கவும்.

# பணியாளரின் அந்தரங்கம்

நமது சக ஊழியர்களின் தனிப்பட்ட தகவல்களைப் பாதுகாப்பதன் மூலம் நாம் ஒவ்வொருவரும் மற்றவரின் அந்தரங்கத்துக்கு மதிப்பளிக்க வேண்டும். நம்மில் இத் தகவலுக்கான அணுகலைக் கொண்டுள்ளவர்கள் நாம் வணிகம் செய்துகொண்டிருக்கும் இடங்களில் நிலவும் சட்டங்களுக்கு இணக்கமான முறையில் அது சேகரித்து, வைக்கப்பட்டு, பயன்படுத்தப்படுவதை உறுதி செய்யவேண்டும். உங்கள் பணிப் பொறுப்புகள் பணியாளரின் தனிப்பட்ட தகவல்களைச் சேகரித்தல், சேமித்தல் மாற்றியமைத்தல், பரிமாற்றுதல், தடுத்தல், நீக்குதல் அல்லது பயன்படுத்துதலை உள்ளடக்கியதாக இருந்தால், நீங்கள் உங்கள் வேலைக்கும் ஒட்டுமொத்தமாக Ansell நிறுவனத்துக்கும் பொருந்தக்கூடிய அந்தரங்க மற்றும் தரவுப் பாதுகாப்புச் சட்டங்களை அறிந்திருப்பதும் அவற்றுக்கு இணங்கி நடப்பதும் உங்கள் கடமையாகும்.



# வாடிக்கையாளர்கள் மற்றும் வணிகக் கூட்டாளிகளுக்கான நமது பொறுப்புகள்




## தயாரிப்பு பாதுகாப்பு

Ansell -இன் முக்கியக் குறிக்கோள்களில் ஒன்று நாம் உருவாக்குகின்ற, தயாரிக்கின்ற மற்றும் விற்பனை செய்கின்ற தயாரிப்புகள் பாதுகாப்பாகவும், நம்பகமானதாகவும், பயனுள்ளதாகவும் இருப்பதை உறுதி செய்வதாகும். இந்த இலக்குக்கு மேலும் வலுச் சேர்க்க, Ansell பொருட்களின் உருவாக்கம், தயாரிப்பு, விற்பனை மற்றும் விநியோகம் ஆகியவை தொடர்பான அனைத்து பொருந்தக்கூடிய நிபந்தனைகளையும் தரநிலைகளையும் நாம் பின்பற்ற வேண்டும். உங்கள் வேலைக்குப் பொருந்தக்கூடிய நிபந்தனைகள் மற்றும் தரநிலைகள் பற்றிய கூடுதல் தகவல்கள் உங்களுக்குத் தேவைப்பட்டால், தர மற்றும் / அல்லது ஒழுங்குமுறை அணிகளிடமிருந்து அல்லது சட்டத் துறையிடமிருந்து நீங்கள் ஆலோசனை கோர வேண்டும். நமது சப்ளையர்கள் நமக்கு வழங்கும் தயாரிப்புகள் மற்றும் சேவைகளின் பாதுகாப்பு மற்றும் செயல்திறனை அவர்கள் உறுதிசெய்ய வேண்டும் எனவும் நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

ஒரு தயாரிப்பு குறித்த புகார் அல்லது குறைபாடு இருப்பது உங்களுக்குத் தெரியவந்தாலோ அல்லது தனிப்பட்ட முறையில் தகவல் அளிக்கப்பட்டாலோ, Ansell நடைமுறைகளுக்கு இணங்க நீங்கள் அதற்கு உடனடியாக பதிலளிக்க வேண்டும். ஏதேனும் Ansell தயாரிப்பின் நேர்மை, செயல்திறன் மற்றும் விளைபயனில் மோசமான பாதிப்பை ஏற்படுத்துகின்ற அல்லது சமரசம் செய்துகொள்கின்ற ஏதேனும் பிரச்சனை பற்றி உங்களுக்குத் தெரியவந்த உடனேயே நீங்கள் அதைத் தெரியப்படுத்த வேண்டும். தயாரிப்பு தொடர்பான அனைத்துப் புகார்களையும், நினைவூட்டல் அறிவிப்புகளையும் Ansell தீவிரமானதாக எடுத்துக்கொண்டு, அவற்றுக்கு விரைவாகவும் முழுமையாகவும் பதிலளிக்கிறது.

தயாரிப்புப் பாதுகாப்பு தொடர்பாக உங்களுக்கு ஏதாவது கேள்விகள் அல்லது கவலைகள் இருந்தால், நீங்கள் உங்கள் மேலாளரிடம் அல்லது எங்களது தர மற்றும் / அல்லது ஒழுங்குமுறை அணிகளுடன் அல்லது சட்டத் துறையுடன் கலந்தாலோசிக்க வேண்டும்.




# நியாயமான வியாபாரம்

நமது போட்டிக்கான அனுகூலம் கண்டிப்பாக நமது தயாரிப்புகளின் தரம், நமது பிராண்டுகளின் வலிமை, மற்றும் நமது மதிப்புக் கூட்டப்பட்ட சேவைகள் ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்திருக்க வேண்டும். அது ஒருபோதும் நியாயமற்ற வணிக நடைமுறைகளின் விளைவாக இருக்கக் கூடாது. அதோடு, Ansell சார்பாக வணிகம் செய்யும்போது நாம் எப்போதும் நேர்மையாகவும் நியாயமாகவும் செயல்பட வேண்டும்.

### வாடிக்கையாளர்களுடனான நியாயமான வியாபாரம்

அதாவது, பகுதியளவு, நாம் எப்போதும் நமது தயாரிப்புகளின் தரம், அம்சங்கள் அல்லது கிடைக்கும் நிலை ஆகியவை பற்றி ஒருபோதும் திரித்துக் கூறக்கூடாது என்பதில் விழிப்புடன் இருக்க வேண்டும். அரசாங்கத் திட்டங்களால் செலவீடு பெறப்பட்ட தயாரிப்புகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முறையற்ற அல்லது அனுமதிக்கத்தகாத கழிவுகள், தள்ளுபடிகள் அல்லது மற்ற கொடுப்பனவுகளை நாம் ஒருபோதும் நாடவோ அல்லது தக்கவைக்கவோ கூடாது. நிறுவனத்தின் உடல்நலப் பராமரிப்பு தொடர்பான தொடர்பாடல்களைப் பார்க்கவும்: குறிப்பிட்ட கொள்கைகள் மற்றும் நிபந்தனைகளுக்கான உலகளாவிய கையேடு மற்றும் பரிந்துரை வழிகாட்டி உடல்நலப் பராமரிப்பு வணிகங்களுக்குப் பொருந்தக்கூடியதாக இருக்கிறது. இறுதியாக, நமது போட்டியாளர்களின் தயாரிப்புகளைப் பற்றி பொய்யான அறிக்கைகளை நாம் வெளியிடக் கூடாது.

### சப்ளையர்களுடனான நியாயமான வியாபாரம்

Ansell-இன் கொள்முதல் கொள்கைகளுக்கு ஏற்ப, சப்ளையர்களைத் தேர்வுசெய்ய முறைப்படியான, வணிகம் தொடர்பான அளவுகோல்களை மட்டுமே நாங்கள் பயன்படுத்துகிறோம். நேர்மையை வெளிப்படுத்தியுள்ளதாக நம்பப்படும் சப்ளையர்களை மட்டுமே Ansell தேர்ந்தெடுக்கும். கூடுதலாக, இரகசியமான தகவல்களைத் தவறாகப் பயன்படுத்துதல், முக்கியமான உண்மைகளைத் தவறாகச் சித்தரித்தல், வேறு ஏதேனும் நியாயமற்ற கையாளுதல் நடைமுறை ஆகியவற்றின் மூலம் எங்களுடைய சப்ளையர்களின் நியாயமற்ற ஆதாயத்தை நாங்கள் ஒருபோதும் பயன்படுத்துவதில்லை.

சப்ளையர்கள், தங்கள் தயாரிப்புகள் மற்றும் சேவைகளின் தரத்தில் நியாயமாக போட்டியிட நாங்கள் அனுமதிக்கிறோம். எங்கள் சப்ளையர்கள் அல்லது சாத்தியமான சப்ளையர்களிடமிருந்து வரும் பரிசுகள் அல்லது ஆதாயங்கள் எதனாலும் நாங்கள் தவறான அபிப்ராயத்திற்கு ஆளாக மாட்டோம். (ஆதாய முரண்பாடுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது).

நியாயமான வணிகம் பற்றி உங்களுக்கு ஏதாவது கேள்விகள் இருந்தால் அல்லது குறிப்பிட்ட வணிகச் செயல்பாடுகளில் உங்களுக்கு வழிகாட்டுதல் தேவைப்பட்டால், நீங்கள் உங்கள் சட்டத் துறையைத் தொடர்புகொள்ள வேண்டும்.

### வணிகம் சார்ந்த இலஞ்சம்

இலஞ்சம் மூலம் நியாயமற்ற போட்டி நன்மைகளைப் பெற நாம் ஒருபோதும் முயற்சிக்கக் கூடாது. வணிகத்தைப் பெறுவதற்கு அல்லது தக்கவைத்துக்கொள்ள, அல்லது பிற சிறப்பு சலுகைகளைப் பெற ஒரு நிறுவனம் (அல்லது அதன் பிரதிநிதி) மற்றொரு நிறுவனத்துக்கு (அல்லது அதன் பிரதிநிதிக்கு) இலஞ்சம், உபசாரப் பணம் அல்லது முறையற்ற கொடுப்பனவுகளை வழங்கும்போது இந்த வகையான இலஞ்சம் எழுகிறது. கூடுதல் தகவல்களுக்கு, நமது நெறிமுறைத் தொகுப்பின் “இலஞ்சம், உபசாரப் பணம் அல்லது முறையற்ற கொடுப்பனவுகள்” பிரிவைப் பார்க்கவும்.

### போட்டியாளர் தகவல்

நமது வேலை வாயிலாக, நமது போட்டியாளர்கள் தொடர்பான தகவல்களைச் சேகரிக்குமாறு நம்மிடம் கேட்கப்படலாம். இது ஒரு சட்டரீதியான வணிகச் செயல்பாடு என்றாலும் கூட, நாம் இந்தத் தகவல்களை நியாயமான, நன்னெறி சார்ந்த மற்றும் சட்டப்படியான முறையில் சேகரிக்க வேண்டும். பொது-அல்லாத போட்டியாளர் தகவலாகத் தோன்றினால் நீங்கள் எச்சரிக்கையுடன் இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். அத்தகைய தகவல்களைப் பயன்படுத்துவதற்கு அல்லது பரப்புவதற்கு முன்பு சட்டத் துறையிடம் தெரிவிக்கவும். அதோடு, போட்டியாளர் தகவல்களுக்கான அணுகலைப் பெறுவதற்காக நீங்கள் உங்கள் அடையாளத்தை அல்லது திட்டங்களை ஒருபோதும் திரித்துக் கூறக்கூடாது.



## போட்டிச் சட்டங்கள்



போட்டி, அல்லது ஏகபோகத் தடைச் சட்டங்கள் தடையற்ற வணிகத்தை நியாயமற்ற முறையில் கட்டுப்படுத்துகின்ற மற்றும் போட்டியைக் கட்டுப்படுத்துகின்ற எந்த ஒரு வணிக நடவடிக்கையையும் தடுப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளன. இந்தச் சட்டங்கள் ஒவ்வொரு நாட்டிற்கும் வேறுபடுகின்றன என்றாலும் கூட, அவை பொதுவாக குறைந்த விலையில் தரம், புதுமையான தயாரிப்புகள் மற்றும் சேவைகளை ஊக்குவிக்கின்ற முறையில் போட்டியிடுவதை உறுதிசெய்ய முயற்சிக்கின்றன. நன்னெறியின் படியும் சட்டரீதியாகவும் போட்டியிட, நாம் வணிகம் மேற்கொள்ளும் இடங்களில் நடைமுறையில் உள்ள அனைத்து பொருந்தக்கூடிய போட்டிச் சட்டங்களையும் நாம் கட்டாயமாகக் கடைபிடிக்க வேண்டும் என்பதை நாம் அறிந்திருக்க வேண்டும்.

போட்டி சட்டங்கள் சிக்கலானவையாக இருக்கின்ற அதே நேரம், அவை பொதுவாக போட்டியாளர்களுடன் பின்வருவனவற்றைப் போன்ற வர்த்தகத்தைக் கட்டுப்படுத்தக்கூடிய முறையான அல்லது முறைசாரா ஒப்பந்தங்கள் செய்துகொள்வதைத் தடை செய்கின்றன:

- விலைகள் அல்லது வேறு ஏதாவது விற்பனைக்கான பொருளாதார விதிமுறைகளை நிர்ணயித்தல்.
- வாடிக்கையாளர்கள், புவியியல் பிரதேசங்கள், தயாரிப்புகள் அல்லது சேவைகளை ஒதுக்கீடு செய்தல் அல்லது கட்டுப்படுத்துதல்.
- ஒரு வாடிக்கையாளர் அல்லது சப்ளையருடன் வணிகம் செய்ய மறுத்தல் (அல்லது "புறக்கணித்தல்").
- உற்பத்தி அளவு அல்லது ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சியைக் கட்டுப்படுத்துதல்.
- குறிப்பிட்ட வகையைச் சேர்ந்த விற்பனை அல்லது பொருட்கள் அல்லது சேவைகளைச் சந்தைப்படுத்தலில் இருந்து விலகியிருத்தல்.
- தயாரிப்புகள் அல்லது சேவைகளின் அம்சங்களைக் கட்டுப்படுத்துதல் அல்லது தரநிலையாக்கல்.

போட்டிச் சட்டங்கள் சப்ளையர்கள், விநியோகிப்பாளர்கள் அல்லது வாடிக்கையாளர்களுடன் போட்டியைக் கட்டுப்படுத்தக்கூடிய முறையான அல்லது முறைசாரா ஒப்பந்தங்கள் செய்துகொள்வதைத் தடுக்கவும் செய்யலாம். அத்தகைய ஒப்பந்தகள் தயாரிப்புகளைக் கட்டுதல், மறுவிற்பனை விலைகளை நிர்ணயித்தல் அல்லது குறிப்பிட்ட வாடிக்கையாளர்களுக்கு விற்பனை செய்ய மறுத்தல் அல்லது குறிப்பிட்ட சப்ளையர்களிடமிருந்து வாங்குதல் ஆகியவற்றை உள்ளடக்குகின்றன.

போட்டிச் சட்டங்களை மீறுகின்ற புரிந்துணர்வு அல்லது ஒப்பந்தம் ஏற்படுவதைக் கூட Ansell தவிர்க்க வேண்டும். வர்த்தகக் கண்காட்சிகள், வர்த்தக சங்கங்கள் அல்லது தரநிலைகளை நிர்ணயிக்கும் நிறுவனக் கூட்டங்கள், அல்லது போட்டியாளர்களின் பிரதிநிதிகள் கலந்துகொள்கின்ற வேறு ஏதாவது கூட்டங்கள் ஆகியவற்றின் கலந்துகொள்ளும்போது குறிப்பிட்ட சில எச்சரிக்கைகளை கடைபிடியுங்கள். இந்தத் தலைப்புகளில் ஏதேனும் ஒன்றைப் பற்றி ஒரு போட்டியாளர் உங்களிடம் விவாதிக்க முயற்சித்தால், உரையாடலை உடனடியாக நிறுத்திக்கொள்ளுங்கள். அதன் பிறகு நீங்கள் அந்தச் சம்பவத்தைப் பற்றி இணக்க அதிகாரிக்கு அல்லது சட்டத் துறைக்கு உடனடியாகத் தெரியப்படுத்த வேண்டும்.

இந்தச் சட்டங்களை மீறுவதால் அதில் சம்பந்தப்பட்ட தனிப்பட்ட பணியாளர்கள் மற்றும் Ansell இருவருமே கடுமையான விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்பதை தயவுசெய்து கவனத்தில் கொள்ளுங்கள். உங்களுக்கு ஏதாவது கூடுதல் கேள்விகள் இருந்தால், சட்டத் துறையிடமிருந்து நீங்கள் ஆலோசனை கோர வேண்டும்.



## அரசாங்க ஒப்பந்தங்கள்

அரசாங்க வாடிக்கையாளர்களுடன் நீங்கள் பணிபுரியும்போது, அரசாங்க ஒப்பந்த வேலைகளுக்குப் பொருந்துகின்ற சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் நடைமுறைகளை Ansell பின்பற்றி நடப்பது மிகவும் முக்கியமாகும். இந்த விதிகள் பெரும்பாலும் வணிக ரீதியிலான வாடிக்கையாளர்களுடன் நாம் செய்கின்ற வேலையைக் கட்டுப்படுத்துகின்ற விதிகளை விட மிகவும் கடுமையானதாகவும் மிகவும் சிக்கலானதாகவும் இருக்கின்றன.

தயவுசெய்து, ஒரு பொது விலைப்புள்ளியில் Ansell-இன் பங்கேற்புக்குப் பொருந்தக்கூடிய தனிப்பட்ட நிபந்தனைகளைத் தெரிந்துகொள்ள “பொது ஒப்பந்தப்புள்ளிகள்” என்ற பிரிவைப் பார்க்கவும்.

பல சட்டங்கள் (தற்போதைய அல்லது முன்னாள்) அரசுப் பணியாளர்களை ஆலோசகர்களாகக் கூட பணியமர்த்துவற்கு நமக்குத் தடை விதிக்கின்றன மற்றும் அவை எதிர்கால வேலைவாய்ப்பு ஏற்பாடுகள் பற்றி இந்த நபர்களுடன் விவாதிப்பதற்கான நமது தகுதியைக் குறைத்துவிடக்கூடும். எனவே, இந்த வாய்ப்புகளைப் பற்றி தற்போதைய அரசுப் பணியாளரிடம் விவாதிப்பதற்கு முன்னர் மற்றும் கடந்த இரண்டு ஆண்டுகளில் அரசுப் பணியைத் துறந்து வந்திருப்பவரை பணியமர்த்துவதற்கு அல்லது தக்கவைப்பதற்கு முன்னர் சட்டத் துறையிடமிருந்து எழுத்துப்பூர்வ அனுமதியை நீங்கள் அவசியம் பெற வேண்டும்.

ஒரு அரசு நிறுவனம் அல்லது முகமை சம்பந்தமான ஒரு செயல்திட்டம் அல்லது விற்பனை வாய்ப்பில் நீங்கள் பணிபுரிபவராக இருந்தால், உங்களுக்குப் பொருந்துகின்ற இந்த விதிகளை நீங்கள் அறிந்திருப்பதும் அவற்றைப் பின்பற்றுவதும் உங்கள் பொறுப்பாகும். இந்தப் பகுதியில் உங்களுக்கு ஏதாவது கேள்விகள் அல்லது கவலைகள் இருந்தால், உங்கள் மேலாளரிடம், மேற்பார்வையாளரிடம் அல்லது சட்டத் துறையிடம் பேசுங்கள்.

# நமது பங்குதாரர்களுக்கு நம்முடைய பொறுப்புகள்

## ஆதாய முரண்பாடுகள்

Ansell சார்பாக நாம் ஒவ்வொருவரும் பாரபட்சமற்ற மற்றும் விசுவாசமான வணிக முடிவுகளை எடுக்க வேண்டும். அவ்வாறு செய்வதற்கு, அனைத்து உண்மையான அல்லது சாத்தியமுள்ள ஆதாய முரண்பாடுகளையும் நான் சரியான முறையில் கையாள வேண்டும். “ஆதாய முரண்பாடு” என்பது நமது தனிப்பட்ட நலன்கள் ஒட்டுமொத்தமாக Ansell-இன் நலன்களுடன் குறுக்கிடுகின்ற அல்லது குறுக்கிடுவதாகத் தோன்றுகின்ற சூழ்நிலை ஆகும். நமது தனிப்பட்ட நலன்கள் Ansell சார்பாக நமது வேலையை பாரபட்சமின்றி மேற்கொள்வதை சிரமமானதாக ஆக்கும் விதமாக அமைந்துவிடக்கூடிய சூழ்நிலை ஏற்படுவதை நாம் திறமையாக தவிர்க்க வேண்டும்.

சாத்தியமுள்ள ஆதாய முரண்பாடு நிலவும் சூழ்நிலையில் ஈடுபட்டிருப்பதாக நீங்கள் அறியவந்தாலோ அல்லது சந்தேகித்தாலோ, அந்தச் சூழ்நிலை பற்றி நீங்கள் உடனடியாக உங்கள் மேலாளரிடமும், மனித வளத் துறையிடமும் தெரியப்படுத்த வேண்டும். ஆதாய முரண்பாடு ஏற்படும் சூழலில் ஈடுபட்டிருப்பதால் மட்டுமே நமது நெறிமுறைத் தொகுப்பை மீறுவதாக ஆகிவிடாது. ஆயினும், அதைத் தெரிவிக்காமல் இருப்பது அல்லது தெரிவிப்பதைத் தாமதப்படுத்துவது விதிமீறலாகும்.

ஆதாய முரண்பாடுகள் பல்வேறு வழிகளில் எழக்கூடும். பின்வரும் நிகழ்வுகள் ஆதாய முரண்பாடு எழும் சில பொதுவான சூழ்நிலைகள் பற்றி விவரிக்கின்றன:

**பரிசுகள் மற்றும் விருந்தளிப்புகளை கொடுத்தல் மற்றும் பெறுதல்**

வணிக மரியாதைகளைப் பரிமாறிக் கொள்வது பெரும்பாலும் நமது வாடிக்கையாளர்கள், சப்ளையர்கள் மற்றும் பிற வணிகக் கூட்டாளிகளுடன் நல்ல வேலை உறவுகளை வளர்த்துக்கொள்வதற்கான சம்பிரதாயமான அம்சமாக இருக்கிறது. ஆயினும், அவ்வாறான செயல்பாடுகளில் ஈடுபடும்போது நாம் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். பரிசுகள் மற்றும் விருந்தளிப்புகளைக் கொடுப்பது மற்றும் பெறுவது எளிதில் ஆதாய முரண்பாடுகள் எழும் சூழ்நிலைகளுக்கு வழிவகுக்கும். அதோடு, இந்த நடவடிக்கைகள் சரியான முறையில் கையாளப்படா விட்டால் அவை இலஞ்சக் குற்றச்சாட்டுகளுக்கு வழிவகுக்கலாம். ஒரு பரிசு அல்லது விருந்தளிப்பை நீங்கள் வழங்க வேண்டுமா அல்லது ஏற்க வேண்டுமா என்பதைப் பற்றி உங்களுக்கு எப்போதாவது சந்தேகங்கள் எழுந்தால், உங்கள் மேற்பார்வையாளரிடம் அல்லது சட்டத் துறையிடம் நீங்கள் கலந்தாலோசிக்க வேண்டும். முறையற்ற வணிக மரியாதைகள் ஏற்படுவதைத் தடுக்க, பின்வரும் வழிகாட்டுதல்களைப் பின்பற்றுங்கள்:

- குறைந்த மதிப்பிலான பரிசுகளை நீங்கள் கொடுக்கலாம் அல்லது பெறலாம், ஆனால் அவ்வாறு செய்வதற்கு முன் நீங்கள் உங்கள் மேற்பார்வையாளரிடம் அல்லது சட்டத் துறையிடம் ஆலோசனை செய்யவேண்டும்.
- ரொக்க வடிவமாக, பணத்துக்குச் சமமான மதிப்புடைய (உ.ம். ஒரு பரிசு அட்டை), அல்லது பத்திரங்களாக நீங்கள் பரிசுகளை வழங்கவோ அல்லது பெறவோ கூடாது, அல்லது 100 அமெரிக்க டாலருக்கு (அல்லது அதற்கு இணையான உள்ளூர் நாணயம்) மேற்பட்ட மதிப்புடைய எந்தப் பரிசையும் நீங்கள் பரிசுகளை வழங்கவோ அல்லது பெறவோ கூடாது.
- வழக்கமான வணிக விருந்தளிப்புகளை வழங்குவது அல்லது பெறுவது, அது வணிக நிகழ்ச்சி தொடர்புடையதாகவும், சட்டரீதியாக வணிக விவாதங்களை உள்ளடக்கியதாகவும் இருக்கும் வரை அது ஏற்றுக்கொள்ளக் கூடியதாகும். வழங்கப்படும் விருந்தளிப்பு நியாயமானதாக இருப்பதை உறுதி செய்வதற்கு அதைப் பற்றி நீங்கள் உங்கள்



மேலாளரிடம் (முடிந்தால், முன்கூட்டியே) தெரியப்படுத்த வேண்டும்.

- ஏதேனும் பரிசு அல்லது விருந்தளிப்பை மன்றாடிக் கேட்டுக்கொள்ளக் கூடாது.
- பல நாடுகள் உடல்நல வல்லுநர்களுக்கான பரிசுகள் மற்றும் விருந்தளிப்பை முழுமையாகத் தடை செய்துள்ளன அல்லது மேலே உள்ள வழிகாட்டுதல்களை விடக் கடுமையாக அவற்றைக் கட்டுப்படுத்தியுள்ளன. ஒரு உடல்நலப் பராமரிப்பாளருக்கு ஏதேனும் பரிசுகள், விருந்தளிப்பு அல்லது வணிக மரியாதைகளை வழங்குவதற்கு முன்னர், Ansell-இன் உடல்நலப் பராமரிப்பு நிபுணத்துவத் தொடர்புகளிடம் அறிவுரை கோருங்கள்: உலகளாவிய கையேடு மற்றும் குறிப்பு வழிகாட்டி.

இந்த வழிகாட்டுதல்களைக் கடைபிடிக்காத வணிக மரியாதை உங்களுக்கு வழங்கப்பட்டால், நமது நிறுவனத்தின் கொள்கையைச் சுட்டிக்காட்டி நீங்கள் அதை பணிவுடன் மறுத்துவிட வேண்டும். ஒரு வணிக மரியாதை இந்த நெறிமுறைத் தொகுப்புக்கு இணக்கமானதாக இருக்கிறதா என உங்களுக்கு உறுதியாகத் தெரியாவிட்டால், அந்த மரியாதை பற்றி நீங்கள் உங்கள் மேலாளரிடம் அல்லது இணக்க அதிகாரியிடம் தெரிவிக்க வேண்டும்.

### பெருநிறுவன வாய்ப்புகள்

Ansell-இல் உங்கள் பதவி வாயிலாக, தனிப்பட்ட முறையில் உங்களுக்கு ஆர்வமுள்ள வணிக வாய்ப்புகளைப் பற்றி நீங்கள் அறிந்துகொள்ளலாம். Ansell அத்தகைய ஒரு வாய்ப்பைச் செயல்படுத்துவதற்கான சந்தர்ப்பத்தைப் பெற்றிருந்த போதிலும் அவ்வாறு செய்ய மறுத்துவிட்டது என்பது உங்களுக்கு உறுதியாகத் தெரியும் வரை, நீங்கள் தனிப்பட்ட இலாபத்துக்காக (அல்லது மற்றொரு நபரின் இலாபத்துக்காக) அத்தகைய சந்தர்ப்பத்தைச் செயல்படுத்தக் கூடாது. Ansell உடன் போட்டியிடக் கூடிய எந்த நடவடிக்கையிலும் நீங்கள் ஒருபோதும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஈடுபடக் கூடாது.

### வெளிப்புற வேலைவாய்ப்பு

Ansell-இன் சிறந்த நலன்களுக்காக நீங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறீர்கள் என்பதை உறுதிசெய்ய, Ansell-க்கான உங்கள் வேலையைச் செய்கின்ற உங்கள் திறனைத் தடுக்கின்ற, Ansell உடன் போட்டியில் ஈடுபட்டுள்ள நிறுவனத்துக்கான, அல்லது நமது நிதியாதரவு அல்லது ஆதரவை குறிப்பாகத் தெரிவிக்கின்ற எந்தவிதமான வெளிப்புற வேலைவாய்ப்பையும் நீங்கள் ஏற்றுக்கொள்ளக் கூடாது. Ansell-இன் நற்பெயருக்கு களங்கம் விளைவிக்கின்ற எந்த விதமான வெளிப்புற வேலைவாய்ப்பிலும் ஈடுபடாமல் இருப்பதில் நீங்கள் கவனமாக இருக்க வேண்டும். அனைத்து வெளிப்புற வேலை நடவடிக்கைகளுக்கும் உங்கள் மேலாளரிடம் எழுத்துப்பூர்வ முன் அனுமதி பெறப்பட வேண்டும்.

வெளிப்புற வேலைக்கு நிறுவனத்தின் சொத்தை அல்லது நேரத்தை எப்போதும் பயன்படுத்தாமல் இருப்பதை உறுதி செய்யுங்கள்.


### பொருளாதார நலன்கள்

ஒரு Ansell வாடிக்கையாளர், சப்ளையர், பிற வணிகக் கூட்டாளி அல்லது போட்டியாளரிடம் நீங்களோ அல்லது உங்கள் குடும்ப உறுப்பினர்களோ கொண்டிருக்கின்ற ஏதேனும் நேரடி அல்லது மறைமுக பொருளாதார நலன்களை உங்கள் மேலாளரிடம் அல்லது இணக்க அதிகாரியிடம் நீங்கள் தெரிவிக்க வேண்டும். சாத்தியம் இருந்தால், இந்த நலன் பற்றி நீங்கள் முன்கூட்டியே தெரிவிக்க வேண்டும். "குடும்ப உறுப்பினர்" என்பது உங்கள் வாழ்க்கைத் துணைவர், வீட்டிலிருக்கும் கூட்டாளி அல்லது உங்கள் நெருங்கிய குடும்பத்தின் வேறு ஏதாவது உறுப்பினரை உள்ளடக்குகிறது. ஒரே ஒரு விதிவிலக்கு, நிறுவனத்தின் மொத்த நிலுவையிலுள்ள இருப்பின் ஒரு சதவீதத்தைத் தாண்டாத பொது வர்த்தகப் பங்குகளில் முதலீடு செய்வது தான்.

### பணியிட உறவுகள்

சக ஊழியருடன் காதல் அல்லது பாலியல் உறவு கொண்டிருப்பதும், அதேபோல ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட உறுப்பினர்கள் வேலையில் இருப்பதும் பெரும்பாலும் ஆதாய முரண்பாடுகளையே ஏற்படுத்தக்கூடும். Ansell அத்தகைய பணியிட உறவுகளை தடை செய்யவில்லை என்றாலும் கூட, உள்ளூர் சட்டத்திற்கு இணங்க அவை மனித வளத் துறைக்குத் தெரியப்படுத்தப்பட வேண்டும் என்றும், மேலாளர்கள் மற்றும் கீழ்நிலைப் பணியாளர்களுக்கும் இடையில் அல்லது உறவின் ஒரு தரப்பு மற்ற தரப்பின் மீது குறிப்பிடத்தக்க நிர்வாக ரீதியான செல்வாக்கைச் செலுத்தக்கூடிய பிற சூழ்நிலைகளில் அத்தகைய உறவுகளை அனுமதிக்க வேண்டாம் என்றும் நாங்கள் பொதுவாக கோருகிறோம். நீங்கள் ஒரு சக ஊழியருடன் குடும்ப அல்லது காதல் உறவு கொண்டிருந்தால், அதன் விளைவாக எழும் ஆதாய முரண்பாடு முறையாக கையாளப்பட்டிருப்பதை உறுதிசெய்ய தயவுசெய்து மனித வளத் துறையுடன் கலந்தாலோசிக்கவும்.





## நிறுவனத்தின்சொத்து

நமது சொத்துக்கள் பல ஆண்டு கால Ansell பணியாளர்களின் அர்ப்பணிப்பு மற்றும் கடின உழைப்பு ஆகியவற்றின் வாயிலாக பெறப்பட்டுள்ளது. நமது நிறுவனமும், நமது பங்குதாரர்களும், மற்றும் நாம் ஒவ்வொருவரும் இந்தச் சொத்தை நம் சொத்துக்களைப் போலவே விடாமுயற்சியுடன் பாதுகாக்க கடமைப்பட்டுள்ளோம்.

Ansell-இன் சொத்தை கவனமாகப் பயன்படுத்துவதும், மற்றும் அதை திருட்டு, சேதம் மற்றும் இழப்பிலிருந்து (முறையான செலவின ஈடுசெய்தல் நடைமுறைகள் வாயிலானது உட்பட) அதைக் கவனமாகப் பாதுகாப்பதும் நமது பொறுப்பாகும். இது Ansell தொழிற்சாலைகள், உபகரணம், வாகனங்கள், நிதிகள், அறிவுசார் சொத்து மற்றும் நெட்வொர்க் மற்றும் கணிப்பொறிகள் ஆகியவற்றை உள்ளடக்குகிறது. நிறுவனத்தின் சொத்துக்களை சொந்த உபயோகத்துக்காக பயன்படுத்துவது Ansell கொள்கைகளுக்கு இணக்கமானதாக இருக்க வேண்டும்.

## அறிவுசார்சொத்துமற்று ம்இரகசியத்தகவல்

அறிவுசார் சொத்து ("IP") என்பது Ansell -இன் மிகவும் மதிப்புமிக்க வணிகச் சொத்துக்களில் ஒன்றாகும். அறிவுசார் சொத்து Ansell -க்கு முக்கியமானதாகும், ஏனெனில் அது: (1) வாடிக்கையாளர்களிடம் பிராண்டு பற்றிய விழிப்புணர்வையும், விசுவாசத்தையும் உருவாக்குகிறது, (2) நாம் விற்கும் தயாரிப்புகளிலும் சேவைகளிலும், மற்றும் தொழில்நுட்பத்திலும் அவற்றைத் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் அறிவிலும் பாதுகாக்கக்கூடிய சட்ட நலன்களை உறுதி செய்கிறது, (3) Ansell -க்கு ஒரு போட்டிக்குரிய எல்லையைக் கொடுக்கிறது, (4) புதுமையை ஊக்குவிக்கிறது, (5) தொழில்நுட்பத்தின் முன்னோடியாக Ansell -இன் நற்பெயரை உருவாக்குகிறது, மற்றும் (6) புதிய சந்தைகளுக்குள் நுழைவதற்கும் சந்தைப் பங்கை வளர்ப்பதற்கும் Ansell -க்கு உதவுகிறது. அறிவுசார் சொத்து உரிமைகள் வழங்குகின்ற பாதுகாப்பு இல்லாமல், Ansell-இன் போட்டியாளர்கள் நமது வெற்றிகரமான தயாரிப்புகளை நாம் விரைவில் நகல் செய்ய முடியும்.

Ansell ஆனது, பதிப்புரிமைகள், காப்புரிமைகள், வர்த்தகச் சின்னங்கள், தயாரிப்பு மற்றும் பொதி வடிவமைப்புகள், பிராண்டு பெயர்கள் மற்றும் லோகோக்கள், ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி மற்றும் வர்த்தக இரகசியங்கள் ஆகியவை உள்ளிட்ட பல்வேறு அறிவுசார் சொத்துப் பாதுகாப்பு வடிவங்களைப் பயன்படுத்துகிறது. நீங்கள் அத்தகைய அறிவுசார் சொத்தை எப்போது, எங்கு உருவாக்கியிருந்தாலும், பணியிடத்தில் அல்லது வேலை முடிந்த பிறகு உருவாக்கியிருந்தாலும், பொருந்தக்கூடிய சட்டம் மற்றும் நிறுவனத்துடன் நீங்கள் மேற்கொள்ளும் ஏதேனும் ஒப்பந்தத்துக்கு உட்பட்டு உங்கள் உரிமைகள் அனைத்தையும் நீங்கள் Ansell-க்கு ஒப்படைக்கிறீர்கள். Ansell-இன் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளுக்கு இணங்க நீங்கள் அத்தகைய அறிவுசார் சொத்தை Ansell-க்கு தெரியப்படுத்த வேண்டும்.

எல்லா நேரங்களிலும், Ansell -இன் அறிவுசார் சொத்து மற்றும் இரகசிய வணிகத் தகவல்களைப் பாதுகாக்க பணியாளர்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் மற்றும் பொருந்தக்கூடிய கொள்கைகளைப் பின்பற்ற வேண்டும். வெளியிடப்படாத நிதி முடிவுகள், விலை நிர்ணயித்தல், வளர்ச்சி செயல்பாடுகள் மற்றும் சாத்தியமுள்ள கையகப்படுத்தல்கள் அல்லது விலக்கல்கள் ஆகியவை இரகசியத் தகவல்களுக்கான உதாரணங்கள் ஆகும். அங்கீகரிக்கப்படாத அணுகலைத் தடுக்க இரகசியத் தகவல் Ansell-இன் கொள்கைகளுக்கு இணங்க பாதுகாப்பான முறையில் சேமிக்கப்பட வேண்டும். பணியாளர்கள் பொது இடங்களில் இரகசியத் தகவல்களைப் பற்றிப் பேசுவதையோ அல்லது பகிர்வதையோ தவிர்க்க வேண்டும், மற்றும் பிறர் தவறாகப் பயன்படுத்துவது அல்லது திருடுவது தொடர்பான எந்தக் கவலைகளையும் தெரியப்படுத்த வேண்டும். மூன்றாம் தரப்பினருக்கு இரகசியத் தகவல்களை வெளியிடுவதற்கு முன் அல்லது நிறுவனச் சொத்துக்கள் பற்றிய விஷயத்தைப் பகிர்வதற்கு முன், பணியாளர்கள் முறையான அங்கீகாரம் பெற வேண்டும் மற்றும் பொருத்தமான ஒப்பந்த விதிமுறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருப்பதை உறுதிசெய்ய வேண்டும். Ansell பிராண்டுகளையும் வர்த்தகச் சின்னங்களையும் பாதுகாக்க, அவற்றை முறையாகப் பயன்படுத்துவது பற்றி சட்டத் துறை வழங்கியுள்ள வழிகாட்டுதல்களை பணியாளர்கள் பின்பற்ற வேண்டும்.

Ansell அறிவுசார் சொத்தையும் இரகசியத் தகவல்களையும் பாதுகாப்பதோடு, மற்றவர்களின் IP மற்றும் இரகசியத் தகவல்களுக்கும் நமது தகவல்களுக்குக் கொடுக்கும் அதே அளவு அக்கறை எடுக்க வேண்டியதும், மற்றும் ஏதேனும் பொருந்தக்கூடிய விதிமுறைகளுக்கு இணங்க மரியாதையளிக்க வேண்டியதும் மிகவும் முக்கியமாகும். திருட்டு, மூன்றாம் தரப்பின் அறிவுசார் சொத்தைத் தவறாக அல்லது முறைகேடாகப் பயன்படுத்துவது ஆகியவை உங்களையும், சாத்திமிருந்தால் Ansell நிறுவனத்தையும் உரிமையியல் வழக்குகள் மற்றும் சேதங்களுக்கு உள்ளாக்கக்கூடும், அதோடு குற்றவியல் பொறுப்புகளையும் ஏற்படுத்தக் கூடும். Ansell அல்லது மூன்றாம் தரப்பின் அறிவுசார் சொத்து மற்றும் இரகசியத் தகவல்களைப் பயன்படுத்துவது பற்றி உங்களுக்கு ஏதாவது கேள்விகள் இருந்தால், நீங்கள் சட்டத் துறையை கலந்தாலோசிக்க வேண்டும்.

## தரவுத் தனியுரிமை

நமது பணியாளர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் நாம் வணிகம் செய்கின்ற மற்ற மூன்றாம் தரப்பினர் ஆகியோரின் தனிப்பட்ட தரவுகளுக்கு Ansell மதிப்பளிக்கிறது மற்றும் அவற்றைப் பாதுகாக்கிறது, மற்றும் அந்த தனிப்பட்ட தரவுகளை பொறுப்பாக சேகரிப்பது, சேமிப்பது, பயன்படுத்துவது, அனுப்புவது மற்றும் நீக்குவது ஆகியவற்றுக்கு பொறுப்பேற்றுள்ளது.

நாம் இவற்றை உறுதி செய்ய வேண்டும்:

- சட்டரீதியான வணிகத்துக்காக அல்லது வணிக காரணங்களுக்காக மட்டுமே தனிப்பட்ட தரவுகளைச் சேகரிக்கிறோம், நம்மை நம்பி ஒப்படைக்கப்பட்ட தனிப்பட்ட தரவுகளைப் பாதுகாக்கிறோம் மற்றும் அதைச் சேகரிக்கும் நோக்கத்துக்காக மட்டுமே அதைப் பயன்படுத்துகிறோம்;
- அங்கீகரிக்கப்பட்ட நபர்களுக்கு மட்டுமே தனிப்பட்ட தரவுகளுக்கான அணுகல் வழங்கப்பட்டுள்ளது.
- தனிப்பட்ட தரவுகளை அங்கீகரிக்கப்படாத வெளிப்படுத்தலில் இருந்து பாதுகாப்பதற்கு பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கிறோம் மற்றும் தரவுத் தனியுரிமை மீறல் ஏதாவது நடந்திருந்தால் உடனடி நடவடிக்கை எடுக்கிறோம்.

தனிப்பட்ட தரவை நீங்கள் பயன்படுத்துவது நிறுவனத்தின் கொள்கைகளுக்கு இணக்கமானதா என்று உங்களுக்கு உறுதியாகத் தெரியாவிட்டால், சட்டத் துறையைத் தொடர்புகொள்ளவும்.

## சமூக ஊடகம்

பணியாளர்கள், சமூக ஊடகத்தைப் பயன்படுத்துவதில் அனைத்து Ansell கொள்கைகளுக்கும் இணங்க வேண்டும். பணிப் பொறுப்புகள் தொடர்பான தகவல்தொடர்புகளுக்கும், நிறுவனத்தில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய தனிப்பட்ட தகவல்தொடர்புகளுக்கும் எங்கள் கொள்கைகள் பொருந்தும். சமூக ஊடகங்களில் உள்ள தனிப்பட்ட நடவடிக்கைகளில், ஊழியர்கள் மரியாதைக்குரியவர்களாக இருக்க வேண்டும் மற்றும் அவர்களின் செயல்பாடு மற்றவர்கள் Ansell-ஐ உணரும் விதத்தில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் என்பதைத் தெரிந்திருக்க வேண்டும். இண்டர்நெட் ஒரு பொது இடம் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

Ansell அல்லது எங்கள் தயாரிப்புகளைப் பற்றி பேசும்போது பணியாளர்கள் சரியான வெளிப்படுத்தல் அறிக்கையை உள்ளடக்க வேண்டும். மற்றவர்களின் படங்கள் அல்லது வீடியோ இடம்பெறும்போது அனுமதிகள் பாதுகாக்கப்பட வேண்டும் மற்றும் வெளியீடுகள் பெறப்பட வேண்டும் (மேலே உள்ள அறிவுசார் சொத்து மற்றும் இரகசியத் தகவலைப் பார்க்கவும்).

சமூக ஊடகம் தொடர்பான எங்கள் நிறுவனத்தின் முழுக் கொள்கையும் நிறுவனத்தின் இன்ட்ராநெட்டில் கிடைக்கிறது.

## நிறுவனத்தின் கணினிகளை முறையாகப் பயன்படுத்துதல்

நமது நிறுவனத்தின் கணினிகளை நன்னெறி சார்ந்த வணிக நோக்கங்களுக்காகப் பயன்படுத்தும் பொறுப்பு நம் அனைவருக்கும் உண்டு. இந்தக் கணினிகளை எப்போதாவது தனிப்பட்ட பயன்பாட்டுக்கு உபயோகப்படுத்த அனுமதிக்கப்படுகின்றது என்றாலும், Ansell கணினிகளில் நாம் உருவாக்குகின்ற, சேமிக்கின்ற, அனுப்புகின்ற அல்லது பெறுகின்ற விஷயங்கள் உட்பட, உள்ளூர் சட்டம் மற்றும் Ansell கொள்கைகளுக்கு இணங்க நம் பயன்பாடுகளை கண்காணிப்பதற்காக உரிமையை Ansell பெற்றிருக்கிறது என்பதை நாம் தெரிந்துகொள்ள வேண்டும். இது, Ansell மின்னஞ்சல் கணக்குகள் மூலம் அனுப்பப்படுகின்ற, பெறப்படுகின்ற அல்லது அதில் இடம்பெற்றுள்ள அனைத்துத் தரவு மற்றும் தகவல்தொடர்புகள், மேலும் நிறுவனத்தின் கணினிகள், மடிக்கணினிகள், மொபைல் சாதனங்கள் மற்றும் நெட்வொர்க்குகள் ஆகியவற்றில் பராமரிக்கப்படுகின்ற அனைத்து மின்னணு ஆவணங்கள் ஆகியவற்றை உள்ளடக்குகிறது.

அங்கீகரிக்கப்படாத, தொழில் ரீதியாக அல்லாத, சட்டவிரோத அல்லது நெறிமுறையற்ற நோக்கங்களுக்காக நாம் ஒருபோதும் Ansell-இன் கணினிகளை பயன்படுத்தக் கூடாது. அதாவது, பகுதியளவு நாம் இவற்றைச் செய்யக் கூடாது:

- சட்டவிரோதமான அல்லது தவறான, அல்லது வெறுப்பு உண்டாக்குகின்ற, இழிவான, மறைமுகமாக அல்லது வெளிப்படையாக பாலியல் ரீதியான உள்ளடக்கங்களை பதிவிறக்கம் செய்ய அல்லது அனுப்பக் கூடாது (அங்கீகரிக்கப்பட்ட மற்றும் சட்டரீதியான வணிக நோக்கத்துக்குத் தேவைப்பட்டால் தவிர).
- மதக் காரணங்கள், அரசியல் பிரச்சாரங்கள் மற்றும் வெளி நிறுவனங்கள் போன்ற, வெளிப்புற நோக்கங்களுக்காக ஆதரவு கோருவதற்காக Ansell -இன் கணினிகளை நாம் பயன்படுத்தக் கூடாது.
- பதிப்புரிமை பெற்ற பொருட்கள், வர்த்தக இரகசியங்கள், தனியுரிம நிதித் தகவல், அல்லது அதனை ஒத்த உட்பொருட்களை முறையான அங்கீகாரம் இல்லாமல் அனுப்ப அல்லது பதிவிறக்கம் செய்யக் கூடாது.

தகவல் தொழில்நுட்பத் துறையின் வழிகாட்டுதல் மற்றும் கொள்கைகளின்படி, Ansell மின்னணு தரவு மற்றும் தகவல்களின் பாதுகாப்பு, இரகசியத்தன்மை, நேர்மை ஆகியவற்றைப் பாதுகாக்க பணியாளர்கள் பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்க எதிர்பார்க்கப்படுகிறார்கள். உதாரணமாக:

- Ansell வளங்களுக்கான பயனர் ஐடிகளையும் கடவுச்சொற்களையும் பாதுகாக்கவும் மற்றும் அவற்றின் முறையான பயன்பாட்டை உறுதிசெய்யவும். பயனர் ஐடிகளும் கடவுச்சொற்களும் இரகசியத் தகவல்களாகும்.
- கவனிக்கப்படாத போது பணிநிலையங்களைப் பூட்டவும்.
- ஒதுக்கீடு செய்த அனைத்து இணையப் பாதுகாப்பு பயிற்சியையும் மேற்கொள்ளுங்கள்.
- பொது இடங்களில் Ansell-இன் சாதனங்களைப் பயன்படுத்தும்போது, இரகசியத் தகவல்களைப் பாதுகாக்கவும், எடுத்துக்காட்டாக, தனியுரிமைத் திரையைப் பயன்படுத்துதல் மற்றும் சுற்றுப்புறங்கள் குறித்து விழிப்புடன் இருத்தல்.

Ansell கம்ப்யூட்டர் சிஸ்டம்களின் பயன்பாடு தொடர்பான கூடுதல் கொள்கைகள் மற்றும் தகவல்களை நிறுவனத்தின் இன்ட்ராநெட்டின் தகவல் தொழில்நுட்பப் பக்கத்தில் காணலாம்.



# கணக்கேடுகள் மற்றும் பதிவேடுகள்

நமது கணக்கேடுகளும் பதிவேடுகளும் நமது வருமான அறிக்கைகள், நிதி அறிக்கைகள் மற்றும் பிற பொது வெளிப்படுத்தல்கள் ஆகியவற்றுக்கான அடிப்படையாக அமைகின்றன. அதோடு, அவை நமது வணிக முடிவெடுத்தல் மற்றும் மூலோபாயத் திட்டமிடல் ஆகியவற்றுக்கு வழிகாட்டுகின்றன. எனவே, அனைத்து நிறுவனப் பதிவேடுகளிலும் நாம் சமர்ப்பிக்கின்ற தகவல் முழுமையாகவும், துல்லியமாகவும், புரிந்துகொள்ளக்கூடியதாகவும் இருப்பதை உறுதிசெய்ய வேண்டியது நம் அனைவரின் பொறுப்பாகும். இது, வேலைநேர அட்டைகள், பயண மற்றும் செலவின அறிக்கைகள், அளவீட்டு மற்றும் செயல்திறன் பதிவேடுகள், வாடிக்கையாளர் மற்றும் சப்ளையர் பதிவேடுகள், சரக்கிருப்பு பதிவேடுகள், மற்றும் வடிவமைப்பு மற்றும் பொறியியல் பதிவேடுகள் ஆகியவற்றில் நாம் வழங்கும் தகவல்களை உள்ளடக்குகிறது. அவ்வாறான தகவல்களை நாம் ஒருபோதும் தவறாக குறிப்பிடக்கூடாது அல்லது சித்தரிக்கக்கூடாது.

நிதி மற்றும் கணக்கேட்டுப் பொறுப்புகளைக் கையாளுபவர்கள் Ansell-இன் நிதி அறிக்கைகள் உண்மையானதாகவும் நியாயமானதாகவும் இருப்பதை உறுதிசெய்கின்ற சிறப்புப் பொறுப்பைக் கொண்டிருக்கிறோம். Ansell ஒரு ஆஸ்திரேலிய பொது நிறுவனம் என்பதால், நாம் பல்வேறு நிதி அறிக்கைகள் மற்றும் பிற ஆவணங்களை துல்லியமாகவும் உரிய நேரத்திலும் ஆஸ்திரேலிய ஒழுங்குமுறை அதிகாரிகளிடம் சமர்ப்பிக்க வேண்டும். இதற்கு, இந்த அறிக்கைகளைக் கட்டுப்படுத்துகின்ற சட்ட மற்றும் ஒழுங்குமுறைத் தேவைகள் மற்றும் உள் கட்டுப்பாடுகளை நாம் அறிந்திருக்க வேண்டும் மற்றும் பின்பற்ற வேண்டும். ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள், துல்லியமற்ற, முழுமையற்ற அல்லது காலந்தவறிய பதிவேடுகள் அல்லது அறிக்கை நமது நிறுவனத்தை சேதப்படுத்துவதோடு மட்டுமல்லாது, அதில் சம்பந்தப்பட்டவர்களுக்கு சட்டப்பூர்வமான பொறுப்பையும் ஏற்படுத்துகிறது.

ஏதேனும் சந்தேகத்திற்கிடமான கணக்கியல் அல்லது தணிக்கை முறைகேடுகள் அல்லது மோசடி பற்றி நீங்கள் உடனடியாக புகாரளிக்க வேண்டும். சந்தேகத்திற்கிடமான அல்லது முறையற்ற கணக்கியல் அல்லது தணிக்கை விஷயங்களை நன்னம்பிக்கையின் அடிப்படையில் தெரியப்படுத்தியதற்காக உங்களுக்கு எதிராக பழிவாங்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டால் Ansell அதைப் பொறுத்துக்கொள்ளாது.

### தொடர்ச்சியான வெளிப்படுத்தல் மற்றும் பொது தகவல்தொடர்புகள்

ஒரு பொது நிறுவனமாக, Ansell-இன் பாதுகாப்பின் விலையில் முக்கியமான விளைவைக் கொண்டுள்ள எந்தவொரு தகவலையும் Ansell உடனடியாக வெளியிட வேண்டும். அதோடு, சந்தையில் நிலவும் ஏதேனும் முக்கியமான தவறு அல்லது திரித்துக் கூறப்பட்ட தகவல்களை Ansell உடனடியாக திருத்திக்கொள்ள வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட நபர்கள் மட்டுமே இந்த வெளிப்படுத்தல்களை மேற்கொள்ள முடியும். இந்தப் பகுதியில் நாம் கொண்டுள்ள கடமைப்பொறுப்புகள் பற்றிய கூடுதல் தகவல்களுக்கு, Ansell.com-இல் ஆன்லைனில் கிடைக்கும் நமது தொடர்ச்சியான வெளிப்படுத்தல் கொள்கையைப் பார்க்கவும். நமது கடமைப்பொறுப்புகள் பற்றி நம் ஒவ்வொருவருக்கும் தெரிந்திருக்க வேண்டும் மற்றும் எல்லா நேரங்களிலும் நாம் அதைப் பின்பற்ற வேண்டும்.

### ஆவணத்தைத் தக்கவைத்தல்

நிறுவனத்தின் ஆவணங்களை நாம் எவ்வளவு காலம் வைத்திருக்க வேண்டும் என்பதையும், நாம் எப்படி, எப்போது அவற்றை அப்புறப்படுத்த வேண்டும் என்பதையும் பற்றிய விதிகளை அறிந்திருக்க வேண்டிய மற்றும் கடைபிடிக்கின்ற பொறுப்பு நமக்கு இருக்கிறது. எனவே, நிறுவனத்தின் எந்தவொரு பதிவேட்டையும் காப்பகப்படுத்துவதற்கு அல்லது அழிப்பதற்கு முன்னர் Ansell-இன் *பதிவேடு தக்கவைத்தல் கொள்கையில்* விளக்கிக் கூறப்பட்டுள்ள வழிகாட்டுதல்களை நாம் அறிந்திருப்பதும் கடைபிடிப்பதும் அவசியமாகும். ஒரு குறிப்பிட்ட ஆவணத்தை நீங்கள் வைத்திருக்க வேண்டுமா அல்லது அழிக்க வேண்டுமா என்பது உங்களுக்கு உறுதியாகத் தெரியாவிட்டால், சட்டத் துறையை நீங்கள் கலந்தாலோசிக்க வேண்டும்.

உங்கள் கட்டுப்பாட்டில் உள்ள ஆவணங்களுக்கு வழக்கு அல்லது அரசாங்க விசாரணை தொடர்பான தகவல்கள் தேவைப்படலாம் என்பது உங்களுக்குத் தெரிவிக்கப்படலாம். அத்தகைய அறிவிப்பு உங்களுக்கு கிடைக்கப்பெற்றால், பொருத்தமானதாக இருப்பதற்குச் சாத்தியமுள்ள ஆவணங்களை நீங்கள் பாதுகாக்க வேண்டும் (மற்றும் ஒருபோதும் மாற்றவோ, மறைக்கவோ அல்லது அழிக்கவோ கூடாது). ஒரு ஆவணம் தொடர்புள்ளதாக இருக்கிறதா என்பது உங்களுக்கு உறுதியாகத் தெரியாவிட்டால், சட்டத் துறையைத் தொடர்புகொள்ளவும்.

### தணிக்கையாளர்கள் மற்றும் அரசாங்க விசாரணைகளுக்குப் பதிலளித்தல்

Ansell-இல் தயாரிப்புகள், செயல்பாடுகள் அல்லது நிதி அறிக்கைகளை மீளாய்வு செய்கின்ற வெளி மற்றும் உள் தணிக்கையாளர்களுக்கு ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டிய மற்றும் மரியாதையுடன் நடந்துகொள்ள வேண்டிய பொறுப்பு நமக்கு இருக்கிறது. Ansell-இல் ஆய்வு நடத்துகின்ற அரசாங்க ஆய்வாளர்களுக்கும் நாம் ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டும். இந்த நபர்களிடம் ஒருபோதும் குறுக்கீடு செய்ய வேண்டாம் அல்லது தவறான செல்வாக்குச் செலுத்த முயல வேண்டாம். அவர்கள் பெறுவதற்கு உரிமையுள்ள தகவல்கள் அவர்களுக்குத் தெரிவிக்கப்படுவதை உறுதிசெய்யவும். மேற்கொண்டு அறிவிப்பு வரும் வரை ஆவணங்கள், மின்னஞ்சல்கள், அல்லது பிற பதிவேடுகளை அழித்துவிடக் கூடாது. ஒரு விசாரணையைத் தாமதப்படுத்துவது, உள்ளடக்கம் மற்றும் தரவை அழிப்பது அல்லது நீக்குவது, தகவல் தொழில்நுட்ப அமைப்புகளில் இடையூறு செய்வது, தகவல்களை நிறுத்திவைப்பது மற்றும் வன் வட்டுக்கள் அல்லது மின்னஞ்சலுக்கான அணுகலைக் கட்டுப்படுத்துவது அல்லது மறுப்பது ஆகியவற்றுக்கு கடுமையான அபராதங்கள் விதிக்கப்படுகின்றன. சில நாடுகளில் நிறுவனங்களோடு சேர்த்து தனிநபர்களுக்கும் கூட அதிகாரிகள் அபராதங்கள் விதிக்கிறார்கள். ஒதுக்கீடு செய்யப்பட்ட தணிக்கையாளர் அல்லது ஆய்வாளருக்கு எந்தத் தகவல்களைப் பெறுவதற்கு உரிமையுள்ளது என்பதைப் பற்றி உங்களுக்கு ஏதாவது கேள்விகள் இருந்தால், சட்டத் துறையைக் கலந்தாலோசிக்கவும்.






## உள் வர்த்தகம்

நமது வேலை வாயிலாக, நாம் வணிகம் செய்வதில் Ansell அல்லது பிற நிறுவனங்களைப் பற்றி உள் தகவல் எனக் கருதப்படுகின்ற தகவல்களைப் பற்றி நாம் அறிந்துகொள்ளலாம். பொதுவல்லாத தகவல் “உள்” தகவல் என அழைக்கப்படுகிறது, அது பொதுத் தகவலாக இருந்தால், அத் தகவல் தொடர்புடைய நிறுவனத்தின் சரக்கை வாங்குவதா, வைத்திருப்பதா அல்லது விற்பனை செய்வதா எனத் தீர்மானிப்பதில் ஒரு நியாயமான முதலீட்டாளரால் முக்கியமானதாக கருதப்படுகிறது. உள் தகவலுக்கான பொதுவான உதாரணங்கள் இவற்றை உள்ளடக்குகிறது:

- Ansell நிதி முடிவுகள் பற்றிய பொதுவல்லாத தகவல்.
- அறிவிக்கப்படாத கையகப்படுத்தல்கள் மற்றும் விலக்குதல்கள்.
- முதுநிலை மேலாண்மையில் நிகழ்ந்துள்ள மாற்றங்கள் பற்றிய முன்னறிவிப்பு.
- நிலுவையிலுள்ள அல்லது அச்சுறுத்தப்பட்ட வழக்கு
- குறிப்பிடத்தக்க புதிய தயாரிப்பின் உருவாக்கம்.

ஒரு நிறுவனம் பற்றிய உள் தகவலை நாம் பெறும்போது, அந்த நிறுவனத்தின் பத்திரங்களை நாம் வர்த்தகம் செய்யாமலிருக்கலாம். இந்தச் செயல்பாடு “உள் வர்த்தகம்” என அழைக்கப்படுகிறது மற்றும் இது நாம் வணிகம் மேற்கொள்ளும் பல நாடுகளில் பத்திரச் சட்டங்களின் கீழ் சட்டவிரோதமானதாக இருக்கிறது.

உள் தகவலை, அதைத் தெரிந்துகொள்வதற்கான வணிகத் தேவையைப் பெற்றிராத யாருக்கும் ஒருபோதும் தெரியப்படுத்தக் கூடாது. உள் தகவலை மற்றொரு நபருக்குத் தெரியப்படுத்தும்போது, அத் தகவலின் அடிப்படையில் அந்த நபர் உள் வணிகத்தில் ஈடுபடுவார் என்று நமக்குத் தெரிந்திருந்தால் அல்லது தெரியக்கூடும் என்றால் அதை மற்றவருக்குத் தெரியப்படுத்துவது பத்திரங்கள் சட்டப்படி விதிமீறல் ஆகும். இந்தச் சூழ்நிலையில், தனிப்பட்ட முறையில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடாமல் சட்டத்தை மீறியதற்காக நாம் பொறுப்பேற்க வேண்டியிருக்கும் என்று அறுவுறுத்தப்படுகிறது. கூடுதல் தகவல்களுக்கு ansell.com -இல் கிடைக்கும் நமது *கடனீட்டுப் பத்திரங்கள் வர்த்தகக் கொள்கை* பிரிவைப் பார்க்கவும்.

உள் தகவலைத் தெரிந்துகொள்வதற்கு சாத்தியமுள்ள ஒரு பணியாளர், நீங்கள் Ansell பங்குகளைக் கையாளும்போது உங்களைக் கட்டுப்படுத்துகின்ற “வர்த்தக சாளரங்கள்” குறித்த வழிகாட்டுதல்கள் உள்ளிட்ட *கடனீட்டுப் பத்திரங்கள் வர்த்தகக் கொள்கையை* பின்பற்ற வேண்டும். அதோடு, முதுநிலை இயக்குநர் அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் இருப்பவர்கள் வர்த்தக சாளரங்களின் போது கூட Ansell பங்குகளில் பரிவர்த்தனை செய்வதற்கு முன்னர் தலைமைச் செயலதிகாரியிடம் இருந்து அனுமதி பெற வேண்டும். கூடுதல் விவரங்களுக்கு Ansell-இன் *கடனீட்டுப் பத்திரங்கள் வர்த்தகக் கொள்கையை* மீளாய்வு செய்யவும்.

உள் வர்த்தகச் சட்ட மீறல்கள் அதில் சம்பந்தப்பட்ட நபர்களை உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகள் உள்ளிட்ட கடுமையான விளைவுகளுக்கு உள்ளாக்கலாம். உள் வர்த்தகம் பற்றி உங்களுக்கு ஏதாவது கேள்விகள் இருந்தால், நிறுவனத்தில் செயலாளர் அல்லது சட்டத் துறையை கலந்தாலோசிக்கவும்.



## ஊடகங்கள்மற்றும்பகுப்பாய்வாளர்களிடமிருந்துவிசாரணைகள்

Ansell பற்றிய தகவல் பொதுமக்களுக்கு சரியான முறையில் பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளதை உறுதிசெய்ய, தகவல்களுக்கான விசாரணைகளுக்கு நமது நிறுவனத்தின் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் மட்டுமே கருத்துத் தெரிவிக்கவோ அல்லது பதிலளிக்கவோ முடியும். எந்தவொரு பொருத்தமற்ற அல்லது தவறான பதிலும் எதிர்மறையான விளம்பரத்திற்கே வழிவகுக்கும் என்பதையும், அது நமது நிறுவனத்தின் சந்தை மற்றும் சட்ட நிலையை கடுமையாக பாதிக்கும் என்பதையும் ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள்.

ஊடகங்களிடமிருந்து அல்லது முதலீட்டு சமூகத்தின் ஒரு உறுப்பினரிடமிருந்து ஏதாவது விசாரணையை நீங்கள் பெற்றால்:

- வெளிப்புறத் தகவல்தொடர்புகளுக்கு Ansell மற்றும் அதன் வணிக அலகுகள் பற்றிய தகவல்களுக்கான கோரிக்கைகளைப் பார்க்கவும்.

- சட்டப்படியாக புகாரளித்தல் அல்லது முதலீட்டாளர் விசாரணைகள் தொடர்பான கோரிக்கைகளுக்கு துணைத் தலைவர், நிதி, பொருளாளர் மற்றும் முதலீட்டாளர் உறவுகள் பிரிவைப் பார்க்கவும்.

ஒழுங்குமுறை முகமைகள் முதல் (ஆஸ்திரேலிய பங்குச் சந்தை போன்றவை) சட்டத் துறை அல்லது நிறுவன செயலகம் வரையிலான தகவல்களுக்கான கோரிக்கைகளைப் பார்க்கவும்.

ஊடகங்கள் அல்லது பகுப்பாய்வாளர் விசாரணைகள் தொடர்பான எந்தவொரு பதில்களும் நமது தொடர்ச்சியான வெளிப்படுத்தல் கொள்கைக்கு இணக்கமானதாக இருக்க வேண்டும்.

# ஒரு சிறந்த பெருநிறுவனக் குடிமகனாக நமது பொறுப்புகள்

## சமூகப் பொறுப்புணர்வு

Ansell-இல், நமது தொடர் வணிக வெற்றிக்கு நல்ல, பொறுப்பான பெருநிறுவனக் குடியுரிமை மிக முக்கியமானது என்று நாங்கள் கருதுகிறோம். சிறந்த பெருநிறுவனக் குடிமகனாக இருப்பதற்கான ஒரு அத்தியாவசியக் கூறு, நமது தயாரிப்புகளின் சப்ளையர்கள் தங்கள் பணியாளர்கள் அனைவரையும் கண்ணியமாகவும் மரியாதையாகவும் நடத்துவார்கள் என்ற நமது எதிர்பார்ப்பு ஆகும். நமது தயாரிப்புகளின் உற்பத்தி மற்றும் விநியோகத்திலும், சப்ளையர்கள் நமக்கு தங்கள் சேவைகளை வழங்குவதிலும் பொருந்தக்கூடிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் அனைத்தையும் கடைபிடிக்க வேண்டும் என நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

Ansell தயாரிப்புகளின் அனைத்து சப்ளையர்களும் நமது *சப்ளையர் நடத்தை நெறிமுறைத் தொகுப்பை* கடைபிடிக்க வேண்டும் என நாம் எதிர்பார்க்கிறோம். இந்த சப்ளையர்கள் Ansell கோரும் பட்சத்தில் இந்தக் கொள்கைக்கு இணங்கி நடப்பதை உறுதிப்படுத்த வேண்டும், மற்றும் அவர்கள் தணிக்கைகள் மற்றும் சுய மதிப்பீடுகளுக்கு உட்படுத்தப்படலாம்.

நமது வாடிக்கையாளர்களில் பலர் ஆதாய முரண்பாடு ஏற்படுவதற்கு சாத்தியமுள்ள பகுதிகளில் ஆயுதம் தாங்கிய குழுக்களுக்கு நிதியுதவி அளிக்கின்ற தாதுக்கள் மற்றும் உலோகங்கள் பயன்படுத்தப்படுவதைத் தடை செய்கின்ற உள்நாட்டு மற்றும் சர்வதேச சட்டங்கள் மற்றும் வழிகாட்டுதல்களுக்கு உட்படுத்தப்படுகிறார்கள். குறிப்பாக தாந்தலம், வெள்ளீயம், தங்கம் அல்லது டங்ஸ்டன் போன்ற குறிப்பிட்ட மூலப் பொருட்களை அவற்றின் மூலத்தைச் சரிபார்க்காமல் வாங்குவதை Ansell தவிர்க்க வேண்டுமென்று இந்த வாடிக்கையாளர்கள் கோருகிறார்கள், மேலும் Ansell கொள்கைக்கு இது அவசியமாகும். இந்த உலோகங்களைக் கொண்ட ஏதாவது மூலப்பொருட்களை நீங்கள் வாங்க வேண்டியிருந்தால், சப்ளையர்களை நாங்கள் முறைப்படி விசாரணை செய்திருக்கிறோம் என்பதை உறுதிசெய்ய தயவுசெய்து உலகளாவிய வழங்கல் பிரிவு அல்லது சட்டத் துறையை நீங்கள் தொடர்புகொள்ள வேண்டும்.

## சுற்றுச்சூழல்பாதுகாப்பு

நமது உலகளாவிய சமுதாயத்தின் சிறந்த பெருநிறுவனக் குடிமகன்களாக, சுற்றுச்சூழலுக்கு பொறுப்புள்ள முறையில் செயல்படுவதற்கும், உறுதியான நடைமுறைகளை ஊக்குவிப்பதற்கும் நாம் கடுமுயற்சி செய்யவேண்டும். அதாவது, நமது வேலையைக் கட்டுப்படுத்துகின்ற ஏதேனும் பொருந்தக்கூடிய சுற்றுச்சூழல், உடல்நல மற்றும் பாதுகாப்புச் சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் கொள்கைகளை நாம் நிறைவு செய்யவேண்டும் அல்லது அதையும் விஞ்சும் அளவுக்குச் செயல்பட வேண்டும். பொருந்தக்கூடிய தரங்களை அறிந்திருப்பதும் அதைக் கடைபிடிப்பதும் உங்கள் பொறுப்பாகும். நமது நடைமுறைகள் நம் சுற்றுச்சூழலில் ஏற்படுத்தும் தாக்கம் தொடர்பாக உங்களுக்கு ஏதாவது கவலைகள் இருந்தால், நீங்கள் அந்த சூழ்நிலை பற்றி உடனடியாக புகார் செய்ய வேண்டும்.

## அரசியல்மற்றும்அறக்கொடைபங்களிப்புகள்

நாம் வசிக்கின்ற மற்றும் பணிபுரிகின்ற சமுதாயங்களை தீவிரமாக ஆதரிக்குமாறு நாம் ஊக்குவிக்கப்படுகிறோம். ஆயினும், Ansell -இன் சொத்துக்கள், தொழிலகங்கள், இயற் வளங்கள் அல்லது பெயரை எழுத்துப்பூர்வ முன் அனுமதியில்லாமல் பயன்படுத்துகின்ற அதே நேரம், சமுதாயத்தில் நாம் தன்னார்வ அல்லது அறக்கொடைச் செயல்பாடுகளில் பங்கேற்காமல் போகலாம். Ansell சார்பாக நீங்கள் பங்களிப்புச் செய்ய விரும்பினால், மனித வளத் துறையைத் தொடர்புகொள்ளவும்.

அதோடு, தனிப்பட்ட அரசியல் செயல்பாடுகளில் பங்கேற்பதற்கான நமது சுதந்திரத்துக்கு Ansell ஆதரவளிக்கிறது. ஆயினும், கடுமையான சட்டங்கள் பெருநிறுவன அரசியல் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துகின்றன. Ansell-இன் சார்பாக செய்யப்பட வேண்டும் எனத் தோன்றுகின்ற எந்தவொரு அரசியல் நடவடிக்கையையும் மேற்கொள்வதற்கு முன் இணக்க அதிகாரி அல்லது சட்டத் துறையிடமிருந்து முன் ஒப்புதல் பெறப்பட வேண்டும், மற்றும் Ansell நிதிகளை அரசியல் நன்கொடைகளுக்கு பயன்படுத்தக் கூடாது. ஏதேனும் அரசியல் கட்சி அல்லது வேட்பாளருக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அரசியல் பங்களிப்புச் செய்வதற்கு நிதிகளை அல்லது சொத்துக்களைப் பயன்படுத்துவதை இது உள்ளடக்குகிறது. எந்த தனிப்பட்ட அரசியல் பங்களிப்புகளுக்காகவும் உங்களுக்கு Ansell ஈட்டுத் தொகை வழங்காது.





# இலஞ்சம், உபசாரப் பணம் மற்றும் ஊழல்

இலஞ்சத்துக்கு எதிராக Ansell உறுதியான நிலைப்பாட்டை எடுக்கிறது. நமது வணிக சமுதாயங்களின் பொறுப்புள்ள உறுப்பினர்களாக இருப்பதற்கு, Ansell-இன் சார்பாக வணிகம் மேற்கொள்ளும்போது நாம் ஒருபோதும் இலஞ்சம், உபசாரப் பணம் அல்லது முறையற்ற கொடுப்பனவை கொடுக்கவோ, ஏற்கவோ, கடன் வழங்கவோ அல்லது அளிக்கவோ கூடாது. “இலஞ்சம்” என்பது அதைப் பெறுபவரின் வணிக முடிவுகளில் தாக்கத்தை ஏற்படுத்துகின்ற அல்லது தாக்கத்தை ஏற்படுத்துவதாகத் தோன்றுகின்ற, அல்லது தனிப்பட்ட மதிப்பீட்டில் சமரசம் செய்கின்ற பணம், பரிசுகள், கடன்கள் அல்லது பிற சலுகைகள் ஆகியவை உட்பட, மதிப்புக் கொண்டிருக்கும் எதையும் உள்ளடக்குகிறது. “உபசாரப் பணம்” என்பது, வணிக ஏற்பாடுகளைச் செய்ததற்காக அல்லது ஊக்குவித்ததற்காக ஏற்கனவே வழங்கப்பட்ட அல்லது வழங்கப்பட இருக்கின்ற தொகையைத் திரும்பப் பெறுவது ஆகும். சாதகமான முடிவுகளைப் பெறுவதற்காக அரசாங்க அதிகாரிகள் அல்லது பணியாளர்களுக்கு இலஞ்சம், உபசாரப் பணம் அல்லது பிற முறையற்ற கொடுப்பனவுகளை ஒருபோதும் மேற்கொள்ளவில்லை அல்லது வழங்கவில்லை என்பதையும் நாம் உறுதிசெய்ய வேண்டும்.

நாம் தனிப்பட்ட முறையில் நன்னெறி சார்ந்தோ அல்லது சட்டரீதியாகவோ செய்யமுடியாததைச் செய்வதற்கு ஒரு மூன்றாம் தரப்பை நாம் நியமிக்கக் கூடாது என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டியது முக்கியமாகும். Ansell சார்பாக ஒரு முறையற்ற கொடுப்பனவை மேற்கொள்வதற்கு, அல்லது ஒரு ஊழல் நடைமுறையை எளிதாக்குவதற்கு ஒரு மூன்றாம் தரப்பை ஈடுபடுத்துவது, நமது நெறிமுறைத் தொகுப்பையும் ஊழல் எதிர்ப்புச் சட்டங்களையும் மீறுவதாக ஆகிறது. மூன்றாம் தரப்பினரைத் தக்கவைப்பதற்கு முன் நமது நியாயமான நடைமுறைகளைப் பயன்படுத்தி அவர்கள் அனைவரையும் நாம் கவனமாக கூர்ந்தாய்வு செய்ய வேண்டும். அதோடு, அவர்கள் ஏதாவது சந்தேகத்திற்குரிய செயல்பாடுகள் அல்லது கொடுப்பனவுகளில் ஈடுபடுகிறார்களா என நாம் அவர்களைத் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும்.

### ஊழல் தடைச் சட்டங்கள்

அனைத்து ஊழல் தடைச் சட்டங்கள், ஒப்பந்தங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளை நாம் கடைபிடிக்க வேண்டும். இந்தக் கட்டுப்பாடுகள் பொதுவாக அரசாங்க அதிகாரிகள் இலஞ்சம் வாங்குவதைத் தடை செய்கின்றன. “அரசாங்க அதிகாரிகள்” என்பது அரசுப் பணியாளர்கள் மற்றும் அரசியல் கட்சிகள், கட்சிகளின் அதிகாரிகள் மற்றும் அரசு அலுவலகத்துக்கு விண்ணப்பிப்போர்ஆகியோரை உள்ளடக்குகிறது. பல நாடுகளில், அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களின் பணியாளர்களையும் அவை உள்ளடக்கியிருக்கலாம். உள்ளூர் சட்டம் அல்லது சம்பிரதாயங்களைப் பொருட்படுத்தாமல், நாம் வணிகம் மேற்கொள்ளும் அனைத்து இடங்களிலும் இந்தச் சட்டங்களை நாம் பின்பற்றுவதை உறுதிசெய்ய வேண்டும். ஊழல் தடைச் சட்டங்கள் சிக்கலானவை, மற்றும் இந்தச் சட்டங்களை மீறுவதால் ஏற்படும் விளைவுகள் கடுமையானதாக இருக்கும். இந்தக் காரணத்திற்காக, இலஞ்சம் எனக் கருதப்படுகின்ற எந்தச் செயல்பாட்டையும் நீங்கள் தவிர்க்க வேண்டும்.



### உபசாரக் கொடுப்பனவுகளும் இலஞ்சமே

சில இடங்களில், அனுமதிகள் அல்லது விசாக்கள் வழங்குவது போன்ற வழக்கமான அரசாங்கச் செயல்பாடுகளை விரைவுபடுத்துவதற்கு சிறு கொடுப்பனவுகளை மேற்கொள்வது ("உபசாரக் கொடுப்பனவுகள்" எனப்படுகிறது) நடைமுறையாக இருக்கலாம். ஆயினும், இந்தக் கொடுப்பனவுகள் சட்ட அல்லது வணிகப் பிரச்சனைகளை ஏற்படுத்தக்கூடும் என்பதால், Ansell-இல் அவை எப்போதும் தடை செய்யப்பட வேண்டும். "உபசாரக் கொடுப்பனவுகள்" மற்றும் வேறு வடிவிலான இலஞ்சத்தை Ansell வேறுபடுத்திப் பார்ப்பதில்லை.

### பொது ஒப்பந்தப்புள்ளிகள்

Ansell வழக்கமாக தயாரிப்புகளை அரசாங்க வாடிக்கையாளர்களுக்கு விற்பனை செய்கிறது மற்றும் ஒரு பொது ஒப்பந்தப்புள்ளியின் ஒரு பகுதியாக விலைப்புள்ளிகளை அது சமர்ப்பிக்கலாம். ஒரு பொது அல்லது அரசாங்க ஒப்பந்தப்புள்ளிகளில் நீங்கள் பங்கேற்றால், அந்த பொது ஒப்பந்தப்புள்ளிச் செயல்முறை தொடர்பான அனைத்து பொருந்தக்கூடிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளையும் நீங்கள் அறிந்திருக்க வேண்டும் மற்றும் அவற்றை கடைபிடிக்க வேண்டும். இந்த விதிகள், உதாரணமாக, ஒப்பந்தப்புள்ளிச் செயல்முறையில் ஈடுபட்டுள்ள அரசாங்க அதிகாரிகளுடன் அதிகாரப்பூர்வமற்ற வழிமுறைகள் வாயிலாக நீங்கள் தொடர்புகொள்வதைத் தடை செய்யலாம்.

இது தொடர்பாக உங்களுக்கு ஏதாவது கேள்விகள் அல்லது கவலைகள் இருந்தால், நீங்கள் சட்டத் துறையைத் தொடர்புகொள்ள வேண்டும்.

## வர்த்தகக்கட்டுப்பாடுகள்



ஒரு சர்வதேச நிறுவனமாக, நமது தயாரிப்புகளை நாம் உலகம் முழுவதும் விநியோகம் செய்கிறோம். ஏற்றுமதிகள், மறு ஏற்றுமதிகள் அல்லது இறக்குமதிகள் உட்பட, நமது சர்வதேச வர்த்தக நடவடிக்கையை ஒழுங்குபடுத்துகின்ற அனைத்து விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளையும் நாம் கவனமாகப் பின்பற்ற வேண்டியது மிகவும் முக்கியமாகும்.

### ஏற்றுமதிகள் மற்றும் இறக்குமதிகள்

ஒரு தயாரிப்பு, சேவை, தொழில்நுட்பம் அல்லது தகவல் துணுக்கு வேறொரு நாட்டில் இருக்கும் ஒரு நபருக்கு அனுப்பப்படும்போது ஒரு ஏற்றுமதி நிகழ்கிறது. தொழில்நுட்பம், தொழில்நுட்பத் தகவல் அல்லது மென்பொருள் ஏதாவது ஒரு வழியில் (தகவல்களைப் பொறுத்தவரை வாய்மொழியாகத் தெரிவிப்பது உட்பட) வேறொரு நாட்டின் குடிமகனுக்கு வழங்கப்படும்போதும் ஒரு ஏற்றுமதி நிகழக்கூடும். ஏற்றுமதி செயல்பாட்டில் ஈடுபடுவதற்கு முன் பட்டுவாடா செய்யும் இடம் மற்றும் பெறுபவர் இரண்டின் தகுதியையும் நீங்கள் சரிபார்க்க வேண்டும். தேவையான உரிமங்கள் மற்றும் அனுமதிகள் அனைத்தையும் நீங்கள் பெறவேண்டும் மற்றும் அனைத்துத் தீர்வைகளையும் சரியாகச் செலுத்த வேண்டும்.

இறக்குமதி செயல்பாடு அல்லது ஒரு வெளிநாட்டிலிருந்து அல்லது வெளி ஆதாரத்திலிருந்து மற்றொரு நாட்டிற்கு நாம் வாங்கும் பொருட்கள் அல்லது சேவைகளைக்





கொண்டுவரும் செயலும் பல்வேறு சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு உட்பட்டதாகும். குறிப்பாக, இந்தச் செயல்பாட்டுக்கு தீர்வைகள் மற்றும் வரிகளை நீங்கள் செலுத்த வேண்டியிருக்கலாம், மற்றும் சில ஆவணங்களையும் நீங்கள் சமர்ப்பிக்க வேண்டியிருக்கலாம்.

வர்த்தகக் கட்டுப்பாட்டுச் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளை மீறுவதால் ஒரு நிறுவனமாக Ansell மீதும், சம்பந்தப்பட்ட தனிநபர்கள் மீதும் ஏற்படும் விளைவுகள் கடுமையானதாக இருக்கும். இதைப் பற்றியோ அல்லது பிற வர்த்தக கட்டுப்பாட்டுக் கொள்கைகள் பற்றியோ உங்களுக்கு ஏதாவது கேள்விகள் இருந்தால், தயவுசெய்து சட்டத் துறையிடம் கலந்தாலோசிக்கவும்.

### பொருளாதாரத் தடைகள் மற்றும் புறக்கணிப்புகள்

நாம் எங்கு வணிகம் செய்துகொண்டிருக்கிறோம் என்பதைப் பொருட்படுத்தாமல், நமது செயல்பாடுகளுக்குப் பொருந்துகின்ற பொருளாதாரத் தடைகள் மற்றும் வர்த்தகத் தடையாணைகளை நாம் கடைபிடிக்க வேண்டும். இந்த பொருளாதாரத் தடைகள் பெரும்பாலும் அயல்நாட்டுக் கொள்கை மற்றும் தேசிய பாதுகாப்பு நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக நாடுகளால் பயன்படுத்தப்படுகின்றன. ஒரு பரிவர்த்தனை பொருந்தக்கூடிய பொருளாதாரத் தடைகள் மற்றும் வர்த்தகத் தடையாணைத் திட்டங்களுக்கு இணக்கமானதாக இருக்கிறதா என்பதைப் பற்றி உங்களுக்கு உறுதியாகத் தெரியாவிட்டால், சட்டத் துறையை நீங்கள் கலந்தாலோசிக்க வேண்டும்.
அதோடு, பல நாடுகள் அனுமதிக்கப்படாத சர்வதேச புறக்கணிப்பில் பங்கேற்பதற்கு அல்லது ஒத்துழைப்புக் கொடுப்பதற்கு நிறுவனங்களுக்குத் தடை விதிக்கின்ற சட்டங்களைச் செயல்படுத்தியுள்ளன. அனைத்து சம்பந்தப்பட்ட புறக்கணிப்புத் தடைச் சட்டங்களுக்கும் இணங்கி நடக்கவேண்டும் என்பது Ansell -இன் கொள்கையாகும்.

புறக்கணிப்புகள் அல்லது வர்த்தகத் தடையாணைகள் தொடர்பான கோரிக்கையை அல்லது மற்ற வடிவிலான தகவல்தொடர்பை நீங்கள் பெற்றிருப்பதாகக் கருதினால், அந்தச் சூழ்நிலை பற்றி நீங்கள் உடனடியாக சட்டத் துறைக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

# நமது நெறிமுறைத் தொகுப்பின் உரிமைத்துறப்புகள்

நமது நெறிமுறைத் தொகுப்பானது அவ்வப்போது மதிப்பாய்வு செய்யப்படும் மேலும் இவை எந்த நேரத்திலும் Ansell Limited-இன் இயக்குநர்கள் வாரியத்தால் சரிபார்க்கப்படலாம், மாற்றப்படலாம் அல்லது திருத்தம் செய்யப்படலாம். அதோடு, இதில் இடம்பெற்றுள்ள தகவல்களின் இறுதி விளக்கத்துக்கு வாரியம் பொறுப்பேற்கிறது.  இயக்குநர்கள் மற்றும் நிர்வாக அதிகாரிகளுக்கான இந்த நெறிமுறைத் தொகுப்பின் எந்தவொரு உரிமைத் துறப்புகள் அல்லது விதிவிலக்குகளும் Ansell Limited இயக்குநர்கள் வாரியத்தால், எழுத்துப்பூர்வமாக மட்டுமே மேற்கொள்ளப்பட வேண்டும். வேறு ஏதாவது உரிமைத் துறப்புகள் அல்லது விதிவிலக்குகள் தலைமைச் செயல் அதிகாரி மற்றும் பொது ஆலோசகரால் கூட்டாக மேற்கொள்ளப்பட வேண்டும். அனைத்து உரிமைத் துறப்புகள் மற்றும் விதிவிலக்குகளும் ஒழுங்குவிதிகளால் அல்லது சட்டத்தால் கோரப்படும்போது உடனடியாகத் தெரிவிக்கப்பட வேண்டும்.



Ansell, ® மற்றும் ™ ஆகியவை Ansell Limited அல்லது அதன் துணை நிறுவனங்களில் ஒன்றுக்குச் சொந்தமான வர்த்தகச் சின்னங்கள் ஆகும். © 2025 Ansell Limited. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை.